Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 19 (21.06.2003) சனிக்கிழமை இதழ்: 259

யாழ்.மக்களின் நன்மை கருதி

EXPO AVIATION

LION AIR

SERENDIB EXPRESS

யாழ். - கொழும்பு - யாழ்.

மூன்று விமானங்களுக்கான ரிக்கெற்றுக்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...

ஹெப்பி இம்பெக்ஸ்

புதிய உயர் கல்லூரி

95, பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் முன்பாக)

யாழ்ப்பாணம். 021 - 2226144

24 மணி நேர சேவைக்கு 077-6038505

(சி-1096)

## வடமராட்சி தும்பளையில் வீடு வீடாகச் சோதனை

வடமராட்சியில் தும்பளைப் பகுதியில்- இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து வீடுவீடாகச் சென்று சோதனை நடவடிக்கைகளை நடாத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு மணியகாரன் சந்தி, மூர்க்கம் ஆகிய பகுதிகளிலேயே இச்சோதனை நடவடிக்கை நடைபெற்றது.

படையினரும், பொலிஸாரும் ஒவ்வொரு வீடுவீடாகச் சென்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சட்டவிரோதமாக ஆயுதங்கள் இருப்பதாகத் தமக்கு த்கவல் கிடைத்ததையடுத்தே, இந்தச் சோதனை நடவடிக்கையில் தாம் ஈடுபடுவதாகப் படையினர் தெரிவித்தனர். (09)

## இடைக்கால நிர்வாகம் அமைக்காது அமைதிப்பேச்சு முயற்சி பலிக்காது!

### நோர்வே தூதரக உயரதிகாரி தோமஸ் வலியுறுத்து

(கொழும்பு)

வட-கிழக்கில் புலிகளின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்யக் கூடிய வகையில், உறுதியான அதிகாரங்களைக் கொண்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை இலங்கை அரசு ஏற்படுத்தவேண்டும். இல்லையேல், விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை நடாத்தலாம் என்று அரசு எதிர்பார்க்க முடியாது. இவ்வாறு, இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் தோமஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமாலை- நோர்வே தூதரகத்தில் நடைபெற்ற தேநீர் விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு பேசும்போது, மேற்படி கருத்தை அவர் வெளியிட்டார்.

இடைக்கால நிர்வாகத்தை அமைக்கும் விடயத்தில், விடுதலைப் புலிகளின் எதிர்பார்ப்பு குறித்து அர

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க ஏவுகணை நாசகாரி கொழும்புத் துறைமுகம் வந்தது!

### 350 படையினருடன் ஹவாயிலிருந்து விஜயம்

(கொழும்பு)

**350 அமெரிக்கப் படையினருடன், அமெரிக்கக் கடற்படையின் பாரிய ஏவுகணை நாசகாரிக் கப்பலான 'யு.எஸ்.எஸ். ஓ கேன்' (USS O' Kane) கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.**

கடந்த எட்டு வருடங்களுக்குப் பின்னர், கொழும்புத் துறைமுகத்துக்கு இப்போதுதான்- அமெரிக்கக் கப்பல்கள் வரத்தொடங்கியுள்ளன.

இந்தவகையில் - அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்தம் ஆரம்பமாகியதன் பின்னர் - கொழும்புத் துறைமுகத்துக்கு வரும், அமெரிக்கக் கடற்படையின் மூன்றாவது கப்பல் 'ஓ கேன்' ஆகும்.

கொமாண்டர் மைக்கல் எஸ். விலான்ட் தலைமையில், வந்திருக்கும் இக்கப்பலின் விஜயம் வழமையானது என, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.

கப்பல் மாலுமிகள் - இலங்கை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 'யு.எஸ்.எஸ் ஓ கேன்' தகவல்கள்



| | |
|---|---|
| முழுமையான பெயர் | - USS O' Kane (DDG 77) |
| ஆரம்பக் கட்டுமானம் | - மே 8,1997 |
| முதற் பயணம் | - மார்ச் 28, 1998 |
| உத்தியோகபூர்வ பயணம் | - ஒக்ரோபர் 23, 1999 |
| புரொப்பளர்கள் | - இரண்டு |
| கப்பலின் நீளம் | - 505.25 அடி (154 மீற்றர்கள்) |
| முழு இடப்பெயர்வு நிறை | - 8300 தொன்கள் |
| வேகம் | - 30 நொட்ஸ் |
| விமானங்கள் | - எதுவுமில்லை ஆனால், ஹெலி இறங்கு தளம் கொண்டது. |
| ஆயுத தளபாடங்கள் | - ❑ MK 41 VLS ஏவுகணைகள் இரண்டு<br>❑ Tomahawk, Harpoo ஏவுகணைகள்<br>❑ MK 45 5 அங்குலம் 54 Caliber light weight gun<br>❑ Phalanx CIWS, MK 46 டோர்பிடோக்கள் |
| மாலுமிகள் | - 23 அதிகாரிகள்<br>24 இளநிலை அதிகாரிகள்<br>291 கடற்படை வீரர்கள் |

## கொழும்பிலிருந்து இரசாயன ஆயுதங்கள் அமெரிக்காவுக்குச் செல்வது தடுக்கப்படும்!

### முற்காப்பு பற்றி இருநாட்டுப் படையதிகாரிகள் பேச்சு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தின் ஊடாக, இரசாயன ஆயுதங்கள் மற்றும், அபாயம் ஏற்படுத்தும் சாதனங்கள் எதுவும்- அமெரிக்காவைச் சென்றடைவதைத் தடுத்து நிறுத்துவதற்கு அமெரிக்கக் கடற்படை நடவடிக்கை எடுத்துவருகிறது.

இவ்விடயம் தொடர்பாக, ஆராய்வதற்கு அமெரிக்கக் கடற்படையின் உயர் அதிகாரிகள் குழுவொன்று, நேற்று கொழும்புக்கு வருகைதந்தது. கொழும்பில் இலங்கை கடற்படையின் உயர் அதிகாரிகளுடன், மேற்படி விடயம் தொடர்பாக பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

அத்துடன்- இவ்வாறு இரசாயன ஆயுதங்கள் கொழும்புத் துறைமுகத்தினூடாக- அமெரிக்காவுக்குக் கடத்தப்படுவதை, எவ்வாறு கட்டுப்படுத்துவது என்றும்- இலங்கைக் கடற்படை உயர் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே - அரபு நாடுகளினூடாக இரசாயன ஆயுதங்கள் அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு, அமெரிக்கக் கடற்படை நடவடிக்கைகளை எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.(01)

## ரணில் அமெரிக்கா செல்கிறார்; முன்னோடியாக மிலிந்த பயணம்!

### ஐ.நாவிலும் உரையாற்றத் திட்டம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செப்ரெம்பர் மாதத்தில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர்- செப்ரெம்பர் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் கூட்டத்தொடரில் கலந்துகொண்டு உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ.நா.கூட்டத்தொடரில் உரையாற்ற வருமாறு- ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனான் அழைப்பு விடுத்திருந்தார்.

இதேவேளை - கிறீஸ் நாட்டுக்குச் சென்றுள்ள அமைச்சர் மிலிந்த மொறகொட, அங்கிருந்து அமெரிக்கா செல்லவுள்ளார். அவர், அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ்ஜையும் அங்கு சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

## 'பொங்கு தமிழ்' எழுச்சி விழாவுக்கு பல்வேறு தரப்பிலிருந்தும் பேராதரவு

### வெகுஜன அமைப்புக்களும் களத்தில்!

(யாழ்ப்பாணம்)

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு, வடபகுதியில் உள்ள பல்வேறு வெகுஜன அமைப்புக்களின் ஆதரவு பெருகிவருகிறது. ஏற்கனவே- பல வெகுஜன அமைப்புக்கள் தமது பேராதரவைத் தெரிவித்துள்ள நிலையில் - புதிதாக வேறுசில மக்கள் அமைப்புக்களும் 'பொங்கு தமிழ்' ஏற்பாட்டில் மும்முரமாகக் களமிறங்கியுள்ளன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினால் 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற தொனிப்பொருளில் நடத்தப்படவுள்ள 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்விற்கு, ஆதரவு தெரிவித்து பலதரப்புக்களிலிருந்தும்- அறிக்கைகளும், துண்டுப்பிரசுரங்களும் வெளியிடப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட்சிகளும், பல்வேறு பொது அமைப்புக்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் 'பொங்கு தமிழ்' நிகழ்விற்கு தமது பெரும் ஆதரவை அளித்துள்ளன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணிக்குப் புதிய நிர்வாகம்; பொதுச்சபை கூட்டக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டத்தினை நடாத்தி, புதிய நிர்வாகத்தினை அமைக்குமாறு- கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தற்போதைய நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு யாழ்.மாவட்டத்திலுள்ள கூட்டணியின் தொகுதிக் கிளைகளின் உறுப்பினர்கள், இந்தக் கோரிக்கை தொடர்பான அவசரக் கடிதம் ஒன்றை - செயலாளர் நாயகம் இரா.சம்பந்

(10ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation எக்ஸ்போ

Expo Aviation (Pvt) Ltd.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999

071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290

(சி -975)

# இலங்கை அரசு
## வடக்கு - கிழக்கு மாகாணம்
## வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
## கடன் இல. 2880 - சி.இ. (C.E)
## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
## நிர்மாண வேலைகள்

## கேள்வி அறிவித்தல் - ஐ.எவ்.பி (I.F.B)

**ஐ.எப்.பி. இல. முல்/நீரப்/01** திகதி:- 20.06.2003

01) வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகு செலவு சார்பாக, சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ், தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி **(I.B.R.D)** கடன் வசதி, ஐ.டி.ஏ **(I.D.A)** நம்பிக்கையின் கீழான வசதி.

02) மாகாணப் பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு - கிழக்கு மாகாணம் திருகோணமலை, இலங்கை அவர்களால் மூடியகேள்விகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்கு கோரப்படுகின்றன.

03) கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது திருகோணமலை யில்மாற்றத்தக்கதான, மாகாணப் பணிப்பாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ **(Draft)** சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி அவர்களிடமிருந்து 26.07.2003 ஆம் திகதி பிற்பகல் 03.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆணவங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04) ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில் இலவசமாக பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களை யும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம எந்திரி,
மாகாண கட்டடங்கள் திணைக்களம்,
பழையகமம், முரசுமோட்டை
பரந்தன், கிளிநொச்சி.

05) சமர்ப்பிக்கப்படும் கேள்விகள், கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், மாகாணப் பணிப்பாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப்பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 27.07.2003 பிற்பகல் 03.00 மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
கேள்விச்சபை,
கட்டடங்கள் திணைக்களம்,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை.

அதேதினம் பிற்பகல் 03.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில், காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில், அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.

06) வேறு விபரங்களைக் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்வி குறிமீட்டு இல. | வேலை விபரம் | கேள்விப்பிணை | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| முல்/நீரப்/ சுவே/1 | மத்திய மருந்தகமும், வைத்திய அதிகாரி விடுதியும் மீள்நிர்மாணம் - மாங்குளம். | 1,79,900/- | 1000/- | 09 மாதங்கள் |
| முல்/நீரப்/ சுவே/2 | மத்திய மருந்தகம் மீள்நிர்மாணம் - அலம்பில் | 1,22,500/- | 1000/- | 06 மாதங்கள் |
| முல்/நீரப்/ சுவே/3 | வைத்திய அதிகாரி விடுதியும், உதவி வைத்திய அதிகாரி விடுதியும் மீள் நிர்மாணம், கிராமிய வைத்திய சாலை - புதுக்குடியிருப்பு | 64,400/- | 750/- | 04 மாதங்கள் |
| முல்/நீரப்/ சுவே/4 | மத்திய மருந்தகம் மீள் நிர்மாணம் - ஒட்டுசுட்டான் | 40,000/- | 500/- | 03 மாதங்கள் |
| முல்/நீரப்/ சுவே/5 | வெளி நோயாளர் பிரிவு மீள்நிர்மாணம், மத்திய மருந்தகம் - நாட்டான்கண்டல், மாந்தை கிழக்கு | 19,000/- | 500/- | 02 மாதங்கள் |
| முல்/நீரப்/ பிசெ/1 | பிரதேச செயலகம் மீள் நிர்மாணம் - ஒட்டுசுட்டான் | 1,46,500/- | 1000/- | 08 மாதங்கள் |

07. கேள்விதாரர்கள் - கேள்விதாரர்களுக்கான செயற்பிரமாணக் குறிப்புக்கள் 04 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகிறது.

**இந்த கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது, கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும், அனுபவமும், இருப்பது- ஒரு தனி ஒப்பந்தத்துக்குத் தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல்வேண்டும்.**

**மாகாணப் பணிப்பாளர்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**வடக்கு- கிழக்கு மாகாணம்,**
**உட்துறைமுக வீதி**
**திருகோணமலை.**

(சி-1097)

# பச்சை மரங்களை வெட்ட காரைநகரில் தடைவிதிப்பு!

(காரைநகர்)

காரைநகரில் பச்சை மரங்களைத் தறிப்பதும், வெளியிடங்களுக்குக் கொண்டு செல்வதும் தடை செய்யப் பட்டிருப்பதாக - சூழல் பாதுகாப்புக் குழு அறிவித்துள்ளது.

காரைநகரில் இருந்து பச்சை மரங்களை தறித்து வெளியிடங்க ளுக்குக் கொண்டுசென்று வியாபா ரம் செய்வோர் தொகை அதிகரித் துள்ளது. அத்துடன், வெளியிடங்க ளில் இருந்து வந்து, காரைநகரில் பச்சை மரங்களைத் தறிப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இதனால், காரைநகரில் இயற்கை வளங்களின் அழிவதைத் தடுப்பதற் காக, இங்கிருந்து மரங்களை வெளியே கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாக சூழல் பாது காப்புக் குழுவினர் அறிவித்துள்ள னர்.

இதனை மீறுவோர் மீது, கடும் நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஆஷ்லி வில்ஸ் நாடு திரும்பினார்

(வொஷிங்ரன்)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்த - ஆஷ்லி வில்ஸ், இப்பதவியில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இவர், வொஷிங்ரனில் உதவி வர்த்தகப் பிரதிநிதியாகக் கடமை யாற்றியாற்றுவார் என்று - அமெரிக்க வெளிவிவகாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## மஹோற்சவம்

கல்வியங்காடு, அருள்மிகு ராஜ ராஜவல்லி அம்பாள் கோயில் வரு டாந்த மஹோற்சவம் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமாகி, சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

## வினைத்திறன்காண் தடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க சேவையின் பொது எழுதுநர் சேவை மற்றும் அங்கீக ரிக்கப்பட்டுள்ள பிறசேவைகள், சிறாப்பர் சேவை, கணக்குப் பதியுநர் சேவை, மற்றும் தட்டெழுத்தாளர் சேவையின் வகுப்பு II "அ" பிரி விலுள்ள உத்தியோகத்தர்களுக் கும், சுருக்கெழுத்தாளர் சேவையின் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோக த்தர்களுக்குமான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை- எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை, வேம் படி பெண்கள் உயர்தரப் பாட சாலையில் இடம்பெறவுள்ளது.

காலை 9.30 முதல் பிற்பகல் 4.30 வரை இப்பரீட்சை இடம்பெறும். பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட் டுள்ளன. (24)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்து

(நவிண்டில்)

பருத்தித்துறை, பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய் களுக்கு தடுப்பு மருந்தேற்றல் பணி- நாளை மறுநாள் காலை 9.00 மணிமுதல், நண்பகல் 12.00 மணிவரை ஆத்தியடியிலும், பிற் பகல் 1.00 மணிமுதல் பி.ப. 3.00 மணிவரை ஓடைக்கரை சனசமூக நிலையத்திலும் இடம்பெறவுள்ள தென, சுகாதாரப் பரிசோதகர் எஸ். பிரணவன் தெரிவித்துள்ளார். (116)

## கைதடி நவீல்ட் பழைய மாணவர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் செவிப்புலனிழந் தோர் பாடசாலை, பழைய மாணவர் சங்கத்தின் 36 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்தப் பொதுக்கூட்ட மும் இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.00 மணிக்கு நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு- பிரதம விருந்தினர்களாக, நவீல்ட் பாடசாலை அதிபரும், பழைய மாண வர் சங்கப் போஷகரான சாம்சன் லூர்தீஸ் மற்றும் இந்து சமய விவ கார அமைச்சர் மகேஸ்வரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், சாவகச்சேரி பிரதேச செயலாளர் கேதீஸ்வரன், சாவகச் சேரி வலயக் கல்விப்பணிப்பாளர் செல்வராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ரா)

## சிரமதானம்

(வண்ணை)

வடபிராந்திய பகவான் ஶ்ரீ சத்தி யசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக்குழுவினரால், கொக்கு வில் இந்து மயானம் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

இச் சிரமதானத்தில் - ஐம்பதுக் கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப் பிடத்தக்கது. (111)

## கலாசாரப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

உலக இந்து மாநாட்டை முன் னிட்டு - இந்து கலாசார அமைச்சு நடத்திய கலாசாரப் போட்டிகளில்- முதல் ஆறு இடங்களையும் பெற்ற வர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வு இம்மாதம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி கோபால கிருஷ்ண ஐயர் தலைமையில் - நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ் விழாவில், பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ் வரனும், சிறப்பு விருந்தினராக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனும் கலந்து கொள்ளவிருக்கின்றனர். (ரா,சு)

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சாமித்தம்பி பத்மநாதன் என்பவருடைய தேசிய அடை யாள அட்டை தவறிவிட்டது. (இல.632232721V) கண்டெ டுத்தவர்கள் நமது ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். (சி-1095)

### வீடு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்குச் சந்தியிலிருந்து, 400 மீற்றர் தொலைவில், 3 பரப்புக் காணி யுடன் கூடிய சகல வசதிகளு டனும் மேல்மாடி வீடு உடனடி யாக விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு - எஸ். கலைச்செல்வன், இராம கிருஷ்ண மகா வித்தியாலய வீதி, பலாலி றோட், கோண்டா வில். (387)

THE ROYAL COLLEGE OF JAFFNA
SPOKEN ENGLISH WITH GRAMMAR
N.VIGNESWARAN ARCHERY
BLACK ROAD, CHANKANAI.
426 (302), K.K.S. ROAD,
JAFFNA.
(சி-1059)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், பிரகாஷ்ராஜ், சௌந்தர்யா நடித்த
சொக்கத் தங்கம்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 8.45 (பு.நே)
BEHIND ENEMY LINE
(சி-974)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த
கே.எஸ்.ரவிக்குமாரின்
பாறை

10.30, 2.30, 6.30, 9.30

# புலிகளிடம் இடைக்கால நிர்வாகம்; மக்களுக்கு நம்பிக்கையைத் தரும்!

## அமைதிக்கான மக்கள் முன்னணி அரசுக்கு கோரிக்கை

(கொழும்பு)

புலிகள் கோருவதைப் போன்ற இடைக்கால நிர்வாகத்தை அரசாங்கம் வழங்க வேண்டும். இந்த இடைக்கால நிர்வாகம் - பரந்த அடிப்படையிலான, சமஷ்டிக் கட்டமைப்புக்கான ஆரம்பமாக இருக்கும். இது மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் என - அமைதிக்கான மக்கள் முன்னணி (People's Front For Peace) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சிறுபான்மையினர் வரலாற்று ரீதியாக ஒடுக்குமுறைகளுக்குட்பட்டு வந்தனர். இங்கு அரசியல் சமத்துவம், பன்மைத்துவம் என்பன தோல்வியையே சந்தித்தன. சிறுபான்மையினரின் உரிமைகள் மறுக்கப்பட்டதுடன், அதிகாரப்பகிர்வும் ஏற்கப்படவில்லை.

ஆனால், சிறுபான்மையினர் அரசியல் அதிகாரப்பகிர்வையே விரும்புகின்றனர். இத்தகைய நிலையில்- இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுக்களை முன்னெடுப்பதற்காக, வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படவேண்டும்.

மீண்டும் பேச்சுக்களுக்கு முயற்சிக்கவேண்டுமாக இருந்தால், இது அவசியம்.

தகுந்த அதிகாரங்களையும், அரசியல் ஆணையையும் கொண்டிருக்கும் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த, உடனடி முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அதேவேளை - இந்த நிர்வாக சபையில், வடக்கு - கிழக்கிலுள்ள சிங்கள - முஸ்லிம் மக்களின் நியாயமான பிரதிநிதித்துவத்திற்காகவும் அரசாங்கம் வாதிடலாம். இந்த இடைக்கால நிர்வாகத்திற்கான அதிகாரங்கள் தொடர்பாக, பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஜனாதிபதியுடன், ஐக்கிய தேசியக் கட்சி பேச்சு நடத்த வேண்டும்.

இனப்பிரச்சினை தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாட்டை, பொதுஜன ஐக்கிய முன்னணி ஏற்றுக்கொள்வதைத் தடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதேவேளை - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தனது இறுக்கமான அரசியல் போக்கைக் கைவிட்டு, பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒத்துழைக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



யாழ்.பல்கலைக்கழகத்தில் அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் பொங்கு தமிழ் நிகழ்வையொட்டி, பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும் பல்கலைக்கழக மாணவர்களின் ஊர்தியைப் படத்தில் காணலாம்.

## திருமலையில் பொறிவெடிக்கு ஒருவர் பலி!

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமத்தில் காட்டிற்கு வேட்டையாடச் சென்ற ஒருவர், பொறிவெடியில் சிக்கிப் பலியானார். என்.அபேரட்ண என்பவரே பொறிவெடியில் சிக்கி உயிரிழந்ததாகத் தெரியவருகின்றது.

# மீண்டும் பயங்கர யுகத்திற்குள் நாடு; எச்சரிக்கின்றார் மகிந்த ராஜபக்ஷ!



மீண்டும் ஒரு பயங்கர யுகத்திற்குள் நாடு சென்றுகொண்டிருக்கின்றது என்று, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் - 1989 ஆம் ஆண்டில் ஐ.தே.க. எப்படி நாட்டைப் பயங்கர யுகத்துக்குக் கொண்டு சென்றதோ, அதைப் போன்றே இப்போதும் இருண்ட யுகத்துக்குள் கொண்டு செல்கின்றது. தெற்கில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களில் அரசியல் பின்னணி இருக்கிறது, எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய மேல்மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் குரே -

இப்போது கொல்லப்படுபவர்கள் மிகக் கவனமாகத் தெரிவுசெய்யப்பட்டே கொல்லப்படுகிறார்கள். மக்களாதரவு உடையவர்களே குறி வைத்துத் தாக்கப்படுகின்றனர். முன்னர், ஐ.தே.க. ஆட்சியில் அரைகுறையாக எரிந்த சடலங்களை வீதிகளில் காணநேரிட்டது. இப்போதும் நாடு அத்தகைய சூழலுக்குள்தான் சென்றுகொண்டிருக்கின்றது என்று அவர் தெரிவித்தார்.

# பாதுகாப்பு அமைச்சருக்கு யுத்தம் பற்றிய எச்சரிக்கை!

## ஜனாதிபதி சந்திரிகா விடுத்தார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் புரிந்துணர்வு உடன்பாட்டைப் பயன்படுத்தி இன்னொரு யுத்தத்துக்கான தயார்படுத்தலை மேற்கொள்வதால், எச்சரிக்கையாக இருக்கும்படி, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்குத் தான் உத்தரவிட்டிருப்பதாக - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை முப்படைத் தளபதிகளுடன் நடத்திய கூட்டத்திலேயே ஜனாதிபதி சந்திரிகா இத்தகவலை வெளியிட்டார்.

இந்தக் கூட்டம் இரண்டு மணிநேரம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்பின் நடவடிக்கைக் குழுவில் புதிதாக நால்வர் நியமிக்கப்பட்டுள்ளனர்!

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைக்குழுவில், சில மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. கூட்டமைப்பின் கூட்டம் கடந்த புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் - கூட்டமைப்பின் நடவடிக்கைக்குழுவில் இருந்து தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் அங்கம் வகித்த ஆனந்தசங்கரியை நீக்குவதாக, கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தன் அறிவித்தார். இவருக்குப் பதிலாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை நியமிக்குமாறு அவர் பரிந்துரைத்தார்.

இதேவேளை, கூட்டமைப்பின் நடவடிக்கைக் குழுவில் கஜேந்திரகுமாரை இணைத்துக்கொள்ள வேண்டும் எனவும் இரா. சம்பந்தன் கேட்டுக்கொண்டார். கஜேந்திரகுமாருக்கு நடவடிக்கைக்குழு உறுப்பினர் பதவியை விட்டுக்கொடுக்க - தமிழ் காங்கிரஸைச் சேர்ந்த அப்பாத்துரை விநாயகமூர்த்தியும், குமரகுருபரனும் முன்வந்தனர்.

ஆனால், இவ்வாறு நடவடிக்கைக்குழு உறுப்பினராக கஜேந்திரகுமார் விரும்பாததால், நடவடிக்கைக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை எட்டிலிருந்து பன்னிரெண்டாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, கூட்டமைப்பிலுள்ள கட்சிகளில் இருந்து தலா ஒவ்வொருவர் புதிதாக நடவடிக்கைக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இதில் - மாவை சேனாதிராசா, சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் ஆகியோர் உடனடியாகவே தெரிவுசெய்யப்பட்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணியினர் தமது பிரதிநிதியின் பெயரைப் பின்னர் தருவதாக உறுதியளித்தனர்.

இந்தக் கூட்டத்தில், இனிவரும் காலத்தில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இணைந்தே சந்திப்புக்களை மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு ஒருமாத கால அவகாசத்தைக் கொடுப்பது என்றும், அதற்குள் அரசு நடவடிக்கை எடுக்காதுவிட்டால் மேலும் ஒருமாத கால அவகாசத்தை கொடுத்துவிட்டு, அரசாங்கத்திற்கான ஆதரவை விலக்கிக் கொள்வதென்றும் கூட்டமைப்பின இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, தன்னை எவரும் கூட்டமைப்பு நடவடிக்கைக்குழுவில் இருந்து நீக்கவில்லை என்றும் - தானே கூட்டங்களில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கிக்கொண்டதாகவும்- தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த பெருமளவு போதைப்பொருள் மீட்பு!

(சென்னை)

இராமேஸ்வரத்தில் இருந்து படகுமூலம் இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த இரண்டு கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்களை, தமிழகப் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு போதைப்பொருட்கள் கடத்திச் செல்லப்படவுள்ளதாகத் தகவல் கிடைத்ததையடுத்து, தனுஷ்கோடி - கோதண்டராமர்குளத்தில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு, பொலிஸார் திடீர் தேடுதலை மேற்கொண்டனர்.

அவ்வேளை, படகில் தயாராக இருந்த மூவர் - போதைப்பொருட்களைக் கைவிட்டுக் காட்டுக்குள் தப்பியோடிவிட்டனர். பொலிஸாரால் மீட்கப்பட்ட போதைப்பொருட்களின் பெறுமதி, இரண்டுகோடி ரூபா எனத் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையை போக்குவரத்துக்கு திறந்துவிடுங்கள்!

## மக்கள் நலவுரிமைச்சங்கம் பிரதமரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கேரதீவு - சங்குப்பிட்டி பாதையைத் திறந்து, மக்களின் போக்குவரத்துக்கு வசதி செய்யவேண்டுமென்று - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் யாழ்.மாவட்ட மக்கள் நலவுரிமைச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பாதையைப் போக்குவரத்துக்குத் திறந்துவிடுவதன்மூலம் - யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட மக்களின் போக்குவரத்துக் கஷ்டங்களை நீக்க முடியுமென்றும், இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# மெண்டிஸ் கொலை தொடர்பாக ஐ.தே.க. அமைப்பாளர் கைது!

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின மேல் மாகாணசபை உறுப்பினர் சுனில் மெண்டிஸ் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக, விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் - ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் ஒருவரை, சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்.

மேல் மாகாணசபை உறுப்பினர் சுனில் மெண்டிஸ், கடந்த திங்கட்கிழமை கந்தானையில் உள்ள எல்பிட்டிவெல என்ற இடத்திலுள்ள அவரது வீட்டில் வைத்து ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மீன் பார்சல் ஒன்றைக் கொடுப்பதற்கு வந்துள்ளதாகக் கூறியே, கொலையாளிகள் இவரது வீட்டுக்குள் நுழைந்தனர். இந்தக் கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் - மோப்ப நாய்களின் உதவியுடன் தடயங்களைத் தேடியபோது - மோப்ப நாய், ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் எட்வேட் சில்வாவின் வீட்டுக்குள் உள்ள குளிர்சாதனப் பெட்டிவரை சென்றிருந்தது.

இதையடுத்தே ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் எட்வேட் சில்வாவைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்.

வத்தளையில் இருந்த பழைய இரும்புப் பாலம் ஒன்றை, ஐ.தே.க. முக்கியஸ்தர் ஒருவர் அகற்றியது தொடர்பாக - சுனில் மெண்டிஸ் முறைப்பாடு செய்ததற்காகவே, அவர கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

## புதிய நிர்வாக சபை தெரிவுக் கூட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டம் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்றது.

புதிய நிர்வாக சபையின் தலைவராக மி.யேசுதாசனும், செயலாளராக இ.அருள்நேசனும், பொருளாளராக ச.அன்ரனும் தெரிவு செய்யப்பட்டனர். (113)

# ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பது பற்றி இரண்டாவது நாளாகச் சந்திரிகா பேச்சு!



சந்திரிகா

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு[illegible] ஜே.வி.பிக்கும் இடையில் கைச்ச[illegible] திடப்படவுள்ள புரிந்துணர்வு உ[illegible] படிக்கை குறித்து, இம்மாத இ[illegible] யில் ஜனாதிபதியுடன் நடத்தப்[illegible] தீர்மானகரமான பேச்சுவார்த்தை[illegible] போது கருத்துக்கள் பரிமாறப்[illegible]

ஜே.வி.பி.யின் பிரசா[illegible] மால் வீர[illegible] ாதிபதி[illegible] நா[illegible]

### அரசாங்க மருத்துவ அதிகாரிகளின்

# சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் புதிய சுற்றறிக்கை தயாரிக்கப் பணிப்பு

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டம் தொடரும் நிலையில் - மருத்துவர்களுக்கான சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் புதிய அறிக்கையொன்றைத் தயாரிக்கும்படி, சுகாதார அமைச்சின் செயலாளருக்கு - சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகளின் போராட்டம் தொடர்பாக, நேற்றுமுன்தினம் அமைச்சரவை உபகுழுவின் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் - மருத்துவ அதிகாரிகளின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமைய - சம்பள முரண்பாடுகளை தீர்க்கும் சுற்றறிக்கை, சுகாதார அமைச்சின் செயலாளர் ரெஜி பேரேராவினால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

ஆனால், இந்தச் சுற்றறிக்கையின் சட்டபூர்வ அங்கீகாரம் குறித்து கேள்வி எழுப்பிய அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், இந்தச் சுற்றுநிருபத்தை நிராகரித்து, தாம் தொடர்ந்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்தது.

இதையடுத்தே, சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன - மருத்துவ அதிகாரிகளின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் புதிய சுற்றுநிருபத்தைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்குமாறு, அமைச்சின் செயலாளர் ரெஜி பேரேராவைக் கேட்டுள்ளார்.

புதிதாகத் தயாரிக்கப்படும் சுற்றறிக்கை, நிதியமைச்சர் கே.என். சொக்ஸி மூலம் அரசாங்க மருத்துவ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, சம்பள முரண்பாடு தவிர்ந்த மருத்துவர்களின் ஏனைய கோரிக்கைகள் தொடர்பாக ஆராய, அமைச்சர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் கரு ஜெயசூரிய தலைமையிலான இந்தக் குழுவில்- நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி, காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன, சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை, மருத்துவர்களின் போராட்டம் தொடர்ந்து நீடிப்பதால், நாட்டிலுள்ள வைத்திசாலைகளில் பெரும் சுகாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முறைப்பாடு செய்யச் சென்றவர் பொலிஸாரால் தாக்கப்பட்டார்

### மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யச் சென்ற நபர் ஒருவர், பொலிஸாரின் தாக்குதலுக்காளான சம்பவம் தொடர்பாக, சம்பந்தப்பட்ட நபரால் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மனித உரிமை ஆணைக்குழு நேற்றுமுன்தினம் விசாரணை செய்தது. இதன்போது, தாக்குதலுக்குள்ளான நபர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதனால், விசாரணைக்கு சமுகமளிக்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை - சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸார், மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்துக்கு வந்து, இது தொடர்பான தமது விளக்கத்தைத் தெரிவித்துச் சென்றனர். (அ)

# கூத்துக்கலையை இங்கு வளர்ப்பதற்கு இளைய தலைமுறை முன்வர வேண்டும்!

### நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சண்முகதாஸ்

"இயலும் இசையும் காலத்தை வென்று - உயிரோட்டத்துடன் விளங்க, உயர்ந்த கருத்துக்களைக் கதைகள் மூலம் ஆடிக்காட்டும் ஒரு கலை வடிவமே நாட்டுக்கூத்து. அன்றைய கிராமிய மக்களின் உள்ளக்கருத்தையும், வாழ்க்கை முறையினையும், உன்னதமான பண்பாட்டுக்கோலங்களையும் வெளிக்கொணரும் கருவூலம் இது. தமிழர்களின் உயிர்த்துடிப்புமிக்க, இக்கலையை வளர்க்க இளைய தலைமுறையினர் முன்வர வேண்டும்.

- இவ்வாறு, பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற மு.சிங்கராயர் எழுதிய 'கூவிப்பறந்த கோகிலங்கள்' எனும் நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்த, யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் குறிப்பிட்டார்.

இலங்கை வங்கிப் பிராந்திய முகாமையாளர் சி.நடராஜலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இவ்விழாவில், நூல் வெளியீட்டுரையைப் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் - சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி என்.சண்முகலிங்கன் நிகழ்த்தினார்.

அவர் தமது உரையில் -

"பழந்தமிழர் போற்றிவளர்த்த எத்தனையோ அருமையான மனித விழுமியங்களைக் கூத்துக்களிலே காணமுடிகின்றது. மனதில் எப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கும் ஒரு கலை, நம்மை விட்டு மெல்ல கைநழுவிச் சென்றுவிடுமோ என்று எணணத் தோன்றுகின்றது.

இந்தப் பயங்கரமான தேக்கநிலையிலிருந்து நாம் விடுபடவேண்டும். கூத்துக்கள் சம்பந்தமான தரவுகளை ஆவணப்படுத்தும் பதிவான இந்நூல், காலத்தின் தேவையாக மட்டுமன்றி- வலுவான கூத்துப் பாரம்பரியத்தின் வேர்களையும் தொட்டுச்செல்கின்றது". என்று குறிப்பிட்டார்.

நூலின் ஆய்வுரையை நிகழ்த்திய கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் தமது உரையில் - "மனிதத்தைப் பாடாத எந்தவொரு கலை இலக்கிய முயற்சியும் நின்று நிலைக்காது. அந்த வகையிலே, கூத்துக்களில் இனங்காணப்பட்ட மனித மாண்புகளை நாம் உய்த்துணரவேண்டும்.

அந்தச் சிந்தனை நெருடலை இந்த நூலின் மூலமாக நமக்குத் தருகின்றார் ஆசிரியர். சமூகத்தில் மலினப்பட்டுக் கொண்டிருக்கும் அவலங்களுக்குக் காரணம், நம் மனித மனத்தின் குழறுபடிகளே என்பதை இடித்துச்சொல்லும் கூத்துச் செல்வத்தை நாம் இழந்துவிடலாகாது. அந்தவகையில், நாளைய சமூகத்திற்கென காத்திரமான ஒருபணியை இந்தநூல் செய்திருக்கின்றது" என்று குறிப்பிட்டார்.

### விடியோப் படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலை படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில், நாளை மு.ப.10 மணிக்கு புவியியற் துறை மண்டபத்தில்,

THE SHOP ON THE HIGH STREET எனும் செக்மொழிப் படம், ஆங்கில உப தலைப்புக்களுடன் காண்பிக்கப்படவுள்ளது.




# ஓய்வூதியர்களின் விபரங்கள் தென்மராட்சியில் மீளாய்வு!

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களது சுயவிபரங்கள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது.

தினமும், குறிப்பிட்ட எண்ணிக்கையான ஓய்வூதியர்களை பிரதேச செயலகத்துக்கு அழைத்து, அவர்களது விபரங்கள் பதிவுசெய்யப்பட்டு வருகின்றன.

ஓய்வூதியர்களது ஓய்வூதிய வவுசர்களை, அவர்களது சொந்த முகவரிக்கு அனுப்புவதற்கு ஏதுவாகவும, மோசடிகள் இடம்பெறுவதைத் தடுப்பதற்காகவும், ஓய்வூதியர்கள் பற்றிய பூரண தரவுகளைத் தொகுத்துவைப்பதற்கு ஏதுவாகவுமே இந்த மீளாய்வுப்பணி இடம்பெறுவதாக, தென்மராட்சி பிரதேச செயலகக் கணக்காளர் தெரிவித்தார். (24)

### பாராட்டு விழா பிற்போடப்பட்டது

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் பொலிஸமா அதிபர் ஆனந்தராஜாவுக்கு இன்று நடைபெறவிருந்த பாராட்டு விழா, தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக பழைய மாணவர் மன்றத்தின் செயலாளர் வ.செல்வராசன் தெரிவித்துள்ளார்.

# ஒரே குடும்பத்தில் மூவரை விசர்நாய் கடித்துக் குதறியது!

(யாழ்ப்பாணம்)

விசர் நாயினால் கடியுண்ட ஒரே குடும்பத்தைச்சேர்ந்த மூவர், மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். அச்சுவேலி தெற்கிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

கி.ஞானசேகரம், அவரது மனைவி வளர்மதி, மகன் சோபிதன் ஆகியோரே விசர்நாயினால் கடியுண்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறறனர். இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

### பொங்கு தமிழுக்கு ரெலோ ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பொங்குதமிழ் நிகழ்வுக்கு, ரெலோ தனது பூரண ஆதரவினை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில், ரெலோ இயக்க முக்கியஸ்தர்களும் கலந்துகொள்வார்களென ரெலோ தெரிவித்துள்ளது.

### நெடுந்தீவு யுவானியார் திருநாள் உற்சவம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு புனித யுவானியார் ஆலயத்தின் வருடாந்த திருநாள், கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் திங்கட்கிழமை நற்கருணை எழுந்தேற்றமும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை இறுதி நாள் திருப்பலியும், கொடியிறக்கமும் நடைபெறும் என ஆலய நிர்வாகசபையினர் தெரிவித்தனர்.

திருநாள் திருப்பலியினை நெடுந்தீவுப் பங்குத் தந்தை அருட்திரு. ஜெபநேசரத்தினம் அடிகளார் ஒப்புக் கொடுக்கின்றார். (113)

# அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு முன்னனுமதி

### புதிய உத்தரவு விரைவில் வெளியாகும்

அன்றாடப் பாவனைக்குத் தேவையான குறிப்பிட்ட சில பொருட்களை, அத்தியாவசியப் பொருட்களாக அரசாங்கம் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுத்துவருகின்றது.

அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வைக் கட்டுப்படுத்துவதற்காகவே, அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துவருவதாக, பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி சித்ரா விமலசிறி தெரிவித்தார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல், அடுத்தவாரம் வெளியிடப்படவுள்ளது. அத்தியாவசியப் பொருட்களாகப் பிரகடனப்படுத்தப்படும் பொருட்களின் விலைகளை, வர்த்தகர்கள் தன்னிச்சையாக அதிகரிக்க முடியாது.

பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகாரத்தைப் பெற்றே விலை அதிகரிப்பை மேற்கொள்ளமுடியும். முதற்கட்டமாக எட்டுப் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்களாகப் பிரகடனப்படுத்தப்படவுள்ளன.

இதில் - பால்மா, ஆங்கில மருந்துப் பொருட்கள், சீமெந்து, சைக்கிள் ரயர் மற்றும் ரியூப் என்பனவும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### நெடுந்தீவில் குணமாக்கல் வழிபாடு

நெடுந்தீவு புனித யுவானியார் ஆலயத்தில், நீண்ட காலத்தின் பின்னர் குணமாக்கல் வழிபாடு நடைபெற்று வருகிறது.

தென்னிந்திய போட்டா ஆச்சிரமத்திலிருந்து வருகை தந்துள்ள அருட்திரு. சேவியர் அருள்ராஜ் இவ் வழிபாட்டினை நடாத்தி வருகிறார்.

## வார்த்தை விளையாட்டு - 38

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 இ | | 2 | 3 | ■ | 4 |
| | ■ | | 5 க | 6 | |
| 7 | 8 அ | | | | ■ |
| பை | | | ■ | | ■ |
| 9 | | 10 லை | ■ | 11 வ | 12 |
| ■ | | | ■ | | கை |

முழுப் பெயர் : ..............................

கற்கும் பாடசாலை : ..............................

கற்கும் தரம் : ..............................

முகவரி : ..............................

.................... ....................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. அயல்நாடு.
5. பாரம்பரிய விளையாட்டு.
7. ஒரு உணவுப்பொருள் குழம்பியுள்ளது.
9. தக்கம்.
11. திட்டுதல் அல்லது ஏசுதல்.



### மேலிருந்து கீழ்

1. ஒரு மரம்.
2. உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த தியாகி.
3. வேள்வி.
4. தலைமயிர்.
6. சூரியன்.
8. பாம்பு இப்படியும் கூறப்படும்.
10. வாழைப்பழச் சீப்புகளின் தொகுதி (தலைகீழாக).
12. சமிக்ஞை.

## வார்த்தை விளையாட்டு - 37 இன் சரியான விடைகள்.



**இடமிருந்து வலம்**

1. தொலைபேசி.
4. பிற்நாட்.
5. ஊதா.
6. வியாபாரம்.
9. அதிகம்.

**மேலிருந்து கீழ்**

1. தொண்டை.
2. லைபீரியா.
3. கடதாசி.
6. விரைவு.
7. பாரதி.
8. சிற்பி.

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,



**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள்:- 25-06-2003

சரியான விடை எழுதிய மூவரை குலுக்கல் மூலம் தெரிவுசெய்து பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 37

இல் பங்குபற்றிச் சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1 ஆம் பரிசு -*
ஆ.பிரியந்தினி
"குமரகிரி",
பலாலி வீதி,
திருநெல்வேலி.

*2 ஆம் பரிசு -*
சே.ஆன்டனியா
கச்சாய் வீதி,
கொடிகாமம்.

*3 ஆம் பரிசு -*
க.பிரதீஸ்வரன்
இல.111, கண்டி வீதி,
வவுனியா.



★ பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.

## My School



Saiva Mahajana Vidyalayam, is my school. It is in Erlalai. We have 15 class rooms. We have a library, laboratory, Canteen and a playground. There are 15 teachers and 300 students. There is a flower garden in our school. We have a well. I love my school very much.

S.Lourds Vithusa, Grade - 8,
Saiva mahajana vidyalayam.

## நீலநிற நரி

நரி ஒன்று தவறி, நீலநிறச் சாயம் உள்ள நீர்த்தொட்டியில் விழுந்துவிட்டது. இதனால், அது நீலநிறமாகக் காட்சியளித்தது. நரி மிகவும் சந்தோஷம் அடைந்தது. மற்றைய மிருகங்களையும் அரசாள்வதற்காகத் தன்னை இறைவன் அனுப்பிவைத்துள்ளதாக அது கூறியது.

நரியின் ஏமாற்று வார்த்தைகளை மற்றைய மிருகங்கள் நம்பின. குள்ளநரிக்கு மரியாதைசெலுத்தி, சிங்கத்தைப் பிரதம மந்திரியாக நரி நியமித்தது. தனது வேடம் வெளிப்பட்டு விடுமோ என அஞ்சிய நரி, மற்றைய எல்லா நரிகளையும் காட்டைவிட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டது. குள்ளநரிகளில் ஒன்று, அரசன் தங்களில் ஒருவன்தான் என்று சந்தேகம் கொண்டது. போலி நரி அரசன் தனது சபையில் இருக்கும்போது, உரத்த சத்தமாக ஊளையிடுமாறு, மற்றைய நரிகளைத் தூண்டி விட்டது. நரிகளின் ஊளையைக்கேட்டு போலி அரசன், நரி தன்னைக் கட்டுப்படுத்தமுடியாது, அதுவும் சேர்ந்து ஊளையிட்டது. இதனால், நரியின் சாயம் வெளுத்தது. மற்றைய மிருகங்கள் கோபங்கொண்டு அதனைத் தாக்கிக்கொன்றன.

ச.துவாரகன், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

--- இங்கே மடிக்கவும் ---





# சிறுவர் அரங்கம்

# துணிவை நேசித்த பையன்

கிரீஸ் நாட்டின் வடபகுதி மசிடோனியா எனப்படும். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, மசிடோனியா என்ற இராச்சியத்தைப் பிலிப் என்ற மன்னன் ஆண்டான். அவன் ஒரு சிறந்த வீரன். கிரீஸின் சிறிய அரசுகளைச் சண்டையிட்டு வென்றான். அவர்கள் யாவரும் அவனை மன்னனாக ஏற்றுக்கொண்டனர்.

அல்பேனிய நாட்டின் அழகிய இளவரசியை அவர் திருமணம் செய்தார். அவர்களுடைய மகனுக்குப் பெயர் அலெக்சாண்டர்.

இளமையிலேயே அலெக்சாண்டர் விளையாட்டை நேசித்தான். அது அவனுடைய உடற்பலத்தை அதிகரித்தது.

கிரேக்கப் படைவீரர்களுக்கும், அவர்களுடைய மகன்மாருக்குமிடையே நடந்த விளையாட்டுப் போட்டியை அலெக்சாண்டர் சண்டைக்குப்போக அவன் விரும்பினான்.

ஒரு வியாபாரி மன்னர் பிலிப்பைப் பார்க்க வந்தார். அப்பொழுது அலெக்சாண்டருக்கு வயது பன்னிரண்டு. மிகத் திறமான குதிரை ஒன்றை அந்த வியாபாரி கொண்டுவந்தான். அதை அரசனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான்.

அது கம்பீரமான தோற்றமுள்ள நல்லினக் குதிரை. அது, தன்மீது யாரும் ஏறியிருந்து ஓட்ட எவரையும் விடவில்லை. தந்தையின் அருகிலிருந்த அலெக்சாண்டர் மிகவும் கவனமாகக் குதிரையை அவதானித்தான். அந்தக் குதிரை அதனுடைய சொந்த நிழலைக்கண்டு அஞ்சுவதை அவன் அவதானித்தான். இறுதியாக, "அப்பா அந்தக் குதிரையை நான் சவாரி செய்யலாமா?" என்று கேட்டான்.

தந்தையின் அருகில்நின்று பார்த்தான்.

பிலிப் மன்னன் தன்னுடைய மகனைப் பார்த்து - "இந்த பையன் கருடன் நீ ஏன் போட்டியிடக்கூடாது" எனக் கேட்டார்.

"அப்பா நான் - பிலிப் மன்னரின் மகன். சாதாரண பையன்களுடன் போட்டியிடமாட்டேன். மன்னர்களின் மகன்மாருடன்தான் நான் போட்டியிடுவேன்."



திறமையான குதிரை வீரர்கள் அதில் ஏறிச் சவாரிசெய்ய முயன்று தோல்வியடைந்த நிலையில், சிறுபையனாகிய நீ அதில் ஈடுபடுவது முட்டாள் தனமானது" என்றார் தந்தை.

"அப்பா" அலெக்சாண்டர் உறுதியாகக் கூறினான். "நான் தோல்வியடைவேனானால், அந்தக் குதிரையை உங்களிடமிருந்து நீங்கள் கூறும் விலைக்கே வாங்குவேன்" என்றான். மன்னர் உடன்பட்டார்.

அலெக்சாண்டர் எச்சரிக்கையாகக் குதிரைக்கு அருகில் சென்றான். அதனுடைய சேணத்தைக் கவனமாக எடுத்துக்கொண்டு, அதனுடைய முகத்தைச் சூரியனை நோக்கித் திருப்பினான். இப்பொழுது, குதிரையால் அதன் நிழலைப் பார்க்கமுடியவில்லை. அலெக்சாண்டர் குதிரையின் கழுத்தை மெதுவாகப் பிடித்தபடி ஒருநொடியில் அதன முதுகில் ஏறியமர்ந்தான். அதன்பின் குதிரை அஞ்சவேயில்லை. குதிரையின் முகம் சூரியனை நோக்கியிருக்கத் தக்கதாக நீண்டதூரம் அதைச் செலுத்தி, தன்னோடு பழக்கப்படுத்திக் கொண்டான். பின்பு, அதை வீட்டுக்குக் கொண்டுவந்தான். மன்னன் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

இளம் வயதினனாக இருக்கும்பொழுதே, அலெக்சாண்டர் அத்தகைய பெருமையுடையவனாக இருந்தான்.

வெளிநாடொன்றுடன் சண்டையிட்டு வெற்றி வீரனாகப் பிலிப் மன்னன் திரும்பி வந்துகொண்டிருந்தான்.

"உன்னுடைய அப்பா வெற்றி வீரராகத் திரும்பி வருகிறார். அவரை நாம் வரவேற்க வேண்டுமென்றாள் தாய்.

அலெக்சாண்டரின் முகம் கறுத்தது. "அம்மா" சீற்றத்துடன் கூறினான்... 'அப்பா வெற்றிக்குமேல் வெற்றியீட்டினால், நான் வெற்றியடைவதற்கு என்ன இருக்கப் போகின்றது. என்னுடைய அப்பா எப்பொழுதும் வெற்றிவீரனாக இருப்பதை நான் விரும்பவில்லை'.

அலெக்சாண்டர் பத்து வயதுப் பையனாக இருக்கும்பொழுதே, அவனைப் போருக்கு அனுப்பத் தந்தையார் தீர்மானித்தார். பிலிப் மன்னன் அவனுக்குச் சிறுபடையைக் கொடுத்து இராச்சியத்தில் ஒரு பங்கைப்பேண மகனை அனுப்பினார். எங்காவது புரட்சியுள்ள இடங்களுக்கு, அலெக்சாண்டர் படையுடன் சென்று அமைதியை நிலைநாட்டினான். சண்டைக்குச் சென்ற ஒவ்வொருமுறையும் அலெக்சாண்டர் வெற்றியுடன் திரும்பினான். இதனால், பெரும்

# அலெக்சாண்டர்

மகனே! "நான் வைத்திருக்கும் இராச்சியம் உனக்குச் சிறியதாகும். இதைவிடப் பெரிய இராச்சியம் உன் திறமைக்கு வேண்டும். நீ உலகத்தின் மன்னனாக வேண்டும்." அந்தக் குதிரையை அவனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். வளர்ந்த பின்பு, இந்தக் குதிரையிலேயே பல போர்களை வென்று வெற்றி வீரனானான் அலெக்சாண்டர்.

அலெக்சாண்டர் எத்தகைய மனிதனாக வரப்போகிறார் என்பதை இந்தச் சம்பவம் எங்களுக்கு எடுத்துக்காட்டியது.

(தொடரும்...)

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- கா.நிலாயினி
கற்கும் பாடசாலை :-
கரணவாய் தாமோதர வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், விளையாட்டு, முத்திரை சேகரித்தல்.



முழுப்பெயர் :- இ.உமேஸ்
கற்கும் பாடசாலை :-
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
கற்கும் தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
பாட்டு, தமிழ், சமயம், விளையாட்டு.



முழுப்பெயர் :- க.பஜீரா
கற்கும் பாடசாலை :-
தெல்லிப்பளை யூனியன் கல்லூரி
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
கலைத்துறை, முத்திரை சேகரித்தல், பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :- த.சுபாஜினி
கற்கும் பாடசாலை :-
ஏழாலை சைவப்பிரகாச மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
சித்திரம் வரைதல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர்:- வி.கனிகை
கற்கும் பாடசாலை :- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :- கதை, கவிதை, கட்டுரை எழுதுதல், புத்தகம் வாசித்தல், விளையாட்டு.

முழுப்பெயர்:- நி.துஷ்யந்தன்
கற்கும் பாடசாலை :- யாழ். மத்திய கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :- சித்திரம், தொலைக்காட்சி பார்த்தல், கதை படித்தல்.

முழுப்பெயர்:- மு.மனோஜ் பிரியா
கற்கும் பாடசாலை :- கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

முழுப்பெயர்:- பே.சைலோ
கற்கும் பாடசாலை :- புனித ஜோன் பொஸ்கோ
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :- கிரிக்கெட், பத்திரிகை வாசித்தல், கதை வாசித்தல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :......................................
கற்கும் பாடசாலை :......................................
கற்கும் தரம் :......................................
வீட்டு முகவரி :......................................
பிறந்த திகதி :......................................
ஆர்வமுள்ள துறைகள் :......................................
:......................................

................ திகதி ........................ ஒப்பம்

........................ அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ........................ பெற்றோர் ஒப்பம்

## My Self



My Name is Thenusha.
I'm ten years old.
I Live at Karaveddy.
My Father's name is Logeswaran.
My Mother's name is Rajalaxmy.
I have one brother.

L.Thenusha
J/ Manikkavasakar vidyalayam,
Karaveddy.

இங்கே மடிக்கவும்






## விடுகதைகளும் விடைகளும்

1. அப்பா வருவார், சேட்டைக் கழற்றுவார், கிணற்றுக்குள் குதிப்பார். அவர் யார்?
வாழைப்பழம்.
2. தச்சன் செய்யாத பெட்டி, தானாகத் திறந்து மூடுவது. அது என்ன?
கண்ணிமை.
3. சிவப்புநிறப் பையினுள் சிவப்பு நற முத்துக்கள். அது என்ன?
மாதுளம்பழம்.
4. ஒரு கூட்டினுள் இரு தைலங்கள். அது என்ன?
முட்டை.
5. தலையைச் சீவினால், தாகம் தீர்ப்பான். அது என்ன?
இளநீர்.

சி.மாலா
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

1. ஏறமுடியாத மரத்தில் எண்ணாயிரம் காய்கள். அது என்ன?
கேழ்வரகு.
2. அம்மா கொடுத்த தட்டில் நீர் ஒட்டவில்லை. அது என்ன?
தாமரை இலை.
3. அக்கா சிவப்பு, குளித்தால் கறுப்பு. அது என்ன?
அடுப்புக்கரி.
4. நெருப்புப்பட்டால் அழுவான். அவன் யார்?
மெழுகுவர்த்தி.
5. அச்சில்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம். அது என்ன?
வளையல்.
6. எட்டிப்பார்த்தால் புகையமயம், தொட்டுப்பார்த்தால் தண்ணீர் மயம். அது என்ன?
பனிக்கட்டி.
7. அவனுக்கு வீடு, மற்றவர்களுக்கு வலை. அது என்ன?
சிலந்தி வலை.
8. மேலே போனால் கீழே வராது. அது என்ன?
புகை.

கு.மனோகரன். தரம் - 10
யாழ். ஹாட்லிக் கல்லூரி.

## உங்கள் கைவண்ணம்



த.ஜனார்த்தனன்,
தரம் - 10
கலாநிதி ஆ.தி.
ம.ம.வி. காரைநகர்.

## விவசாய உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடுகள்

| | | |
|---|---|---|
| கோதுமை | - | சீனா, ரஷ்யா, அமெரிக்கா, இந்தியா, கனடா. |
| சோளம் | - | அமெரிக்கா, சீனா, பிரேசில், ருமேனியா, ரஷ்யா. |
| அரிசி | - | சீனா, இந்தியா, இந்தோனேசியா, பங்களாதேஷ், தாய்லாந்து. |
| கரும்பு | - | பிரேசில், இந்தியா, கியூபா, சீனா, மெக்சிக்கோ. |
| கரும்பு (Sugar Beets) | - | ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா. |
| வாழைப்பழங்கள், | | |
| இலைகள் | - | உகண்டா, பிரேசில், இந்தியா, பிலிப்பைன்ஸ், கொலம்பியா. |
| முந்திரிகைப்பழம் | - | இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின், ரஷ்யா, அமெரிக்கா. |
| தக்காளி | - | அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இத்தாலி, துருக்கி. |
| உருளைக்கிழங்கு | - | ரஷ்யா, போலந்து, சீனா, அமெரிக்கா, இந்தியா. |
| தேங்காய் | - | இலங்கை, இந்தியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா. |

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரி முன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## தட்டிக்கழிப்பு மட்டுமல்ல துரோகத்தனமும் கூடவே !

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை எவ்வாறும் மீள ஆரம்பித்துவிடவேண்டும் என அறிவிப்புக்கள் வழியாகவும், உரைகள் வழியாகவும் முனைப்புக் காட்டும் அளவுக்கு, செயல்ரீதியான நடவடிக்கைகள் எதிலும் அரசாங்கம் அக்கறை காட்டாத போக்கே மேலோங்கியிருக்கிறது.

வடக்கு - கிழக்கில், அதிகாரங்கள் கொண்ட இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டுமென வலியுறுத்திவரும் விடுதலைப் புலிகள் - அவ்வாறான கட்டமைப்புப் பற்றிய வரைபொன்று அரசாங்கத்தினால் முன்வைக்கப்படுமாக இருந்தால் மட்டுமே - தாம் பேச்சுக்களுக்குத் திரும்புவது பற்றி கவனிப்போம் எனப் பல தடவைகள் கூறிவிட்டபோதும்,

- அவ்வாறான வரைபொன்றைச் சமர்ப்பிக்காது, வார்த்தையளவில் மாத்திரம் இடைக்கால நிர்வாகத்தைத் தாம் வழங்கத் தயாராக இருப்பதாகவும், விடுதலைப் புலிகள் பேசுவதற்கு முன்வரவேண்டுமெனவும் அறிவிப்புக்களை அரசாங்கம் தொடர்ந்து விடுத்துவருகின்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு பிரதமர் ரணில் எழுதிய கடிதத்திலும், பின்னர் - ரோக்கியோவில் உதவி வழங்கும் மாநாட்டில் பிரதமர் உரையாற்றியபோதும், இறுதியாக நேற்றுமுன்தினம் தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு அவர் வழங்கிய செய்தியிலும்-

அரசாங்கத்தின் அறிவிப்புக்கள் உப்புச்சப்பற்ற விதமாக, உள்ளடக்கம் எதுவுமின்றிய வார்த்தை ஜாலங்களாகவே அமைந்திருக்கின்றன.

விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாடு இதுதானென தெட்டத்தெளிவாக - கடிதங்கள் மூலமாகவும், அண்மையில் வன்னி சென்றிருந்த நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் வழியாகவும் தெரிவித்துவிட்ட நிலையிலும் -

அரசாங்கம், தொடர்ந்தும் இதுபோன்று ஒப்புக்குச்சப்பாணி அழைப்புக்களை விடுப்பது - சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு எந்தவகையிலும் உதவப்போவதில்லை.

மாறாக - அரசாங்கத்தின் இத்தகைய வெற்று அறிவிப்புக்கள், சமாதான முயற்சிகளின் முக்கிய பங்குதாரராகிய விடுதலைப் புலிகளை ஏகத்துக்கும் சலிப்படையச் செய்துவிடும் என்பதோடு,

அரசாங்கம் - திட்டமிட்டு ஏமாற்றும் பாதையில் செல்கிறதா என்ற சந்தேகத்தையும் வலுப்படுத்தியதாக்கியும்விடும்.

இந்தச் சந்தேகத்தை வலுப்படுத்துவது போலவே, பிரதமரின் நாட்டுமக்களுக்கான உரையில் இன்னுமொரு முக்கிய அம்சமும் அமைந்திருந்தது.

அதாவது - தற்போதுள்ள பிரச்சினைகளிலிருந்து முன்னேறுவது மற்றும் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கும் பொறுப்பு விடுதலைப் புலிகளிடமே இருப்பதாக, பிரதமர் ரணில் குறிப்பிட்டிருப்பது கவனத்திற்குரியதாகும்.

உண்மையில் - விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கான உரிய பதிலை வழங்காமல், ஏதேதோ பேசிவரும் பிரதமர் ரணில்- இப்போது, சமாதானப் பேச்சுக்களின் தேக்கநிலைக்குப் புலிகளே காரணம் என்பது போன்ற மாயையை உருவாக்க முயல்கின்றாரா என்ற வினா, அவரது பேச்சுமூலம் வெளிக்கிளம்புகின்றது.

கொழும்பிலுள்ள ஊடகங்கள் சிலவும் - ஐக்கிய தேசிய முன்னணியின் உயர் வட்டாரங்களை ஆதாரம்காட்டி வெளியிட்ட தகவலொன்றின்படி - 'பந்து இப்போது புலிகளின் பக்கம்' என்ற மாதிரியான தோற்றம் - கொழும்பிலும், அதன் தொடர்ச்சியாக சர்வதேச மட்டங்களிலும் உருவாகுவதற்கு அரசதரப்பு முயற்சி செய்வதாகத் தெரியவருகின்றது.

இதன்மூலம் - சமாதானப் பேச்சுக்களின் தேக்கநிலைக்கான பழியை விடுதலைப் புலிகள் மீது சுமத்திவிட்டு - சர்வதேச அழுத்தத்தைப் புலிகளின் பக்கம் திருப்பிவிடவும் இனி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் எனத் தெரியவருகின்றது.

இவ்வாறான ஒரு நகர்வின் மீது அரசாங்கம் உண்மையிலேயே ஆர்வமாக இருப்பின் - அதன் விளைவுகள் எவ்விதத்திலும் சமாதான முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமான முன்னெடுப்பாக இராது என்பதோடு, அது பாரதூரமான பின்விளைவுகளுக்கும் காலாகிவிடும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதுபோன்றே - இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து வரைபொன்று முன்வைக்கப்படவேண்டுமென அரசதரப்பு இன்னொரு முயற்சியை மேற்கொள்ளலாமென்பதை - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர், பிரதமர் ரணிலின் தொலைக்காட்சி உரைக்கு அளித்த பதிலூடாக சூசகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் - அவ்வாறான கோரிக்கை எழுமாக இருந்தால், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்னவாயிருக்கும் என்பதும், அவரால் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

'அரசாங்கம், விடுதலைப் புலிகளுக்கு வழங்கக்கூடிய அரசியல் - நிர்வாக அதிகாரங்கள் பற்றிய தெளிவான கருத்துக்கள் எதுவும் தெரியாது - அவ்வாறான கட்டமைப்பு அல்லது பொறிமுறையை விடுதலைப் புலிகள் பிரேரிப்பது புத்திசாலித்தனமல்ல. இதனால்தான் - நாம் அரசாங்கத்தையே யோசனைகளை முன்வைக்குமாறு கோருகிறோம்' என அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்தியிருக்கிறார்.

அதேவேளை - சமாதான முயற்சிகளில், முற்றாக அடிப்படை மாறுதல்களை வலியுறுத்துவதாகவும், புதிய - மறுசீரமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமே விடுதலைப் புலிகள் எதிர்பார்ப்பது எனவும் கலாநிதி பாலசிங்கம் எடுத்துக் கூறியிருக்கிறார்.

எனவே - அரசாங்கம் வெறுமனே அழைப்புக்களை விடுப்பதுடன் நின்றுவிடாது, இடைக்கால நிர்வாகம் பற்றிய நடைமுறைச் சாத்தியமான வரைபை உடனடியாக முன்வைத்தால் மட்டுமே- அது ஆக்கபூர்வமான செயற்பாடாக இருக்கும்.

அதைவிடுத்து - வாய்ப்பேச்சுக்களில் ஜாலம் காட்டவும், தனக்குரிய பொறுப்பை மறுத்து - புலிகளே சமாதானப் பேச்சுக்களின் மந்தநிலைக்குக் காரணம் என பொய்யான தோற்றப்பாட்டை அரசாங்கம் உருவாக்க முனையுமாயின் - அது நம்பிக்கையீனத்தைத் தருவது மட்டுமல்ல, தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகவும் அமைந்துவிடும்.

# சீனி, பருப்பு எடுத்து வராததால் நிவாரண விநியோகம் தாமதம்!

## செயலக வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு வழங்குவதற்காக, கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட சீனி, பருப்பு ஆகியவற்றை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்படாததால், நிவாரண விநியோகம் தாமதமடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களுக்குரிய இடம்பெயர்ந்தோர் உலர் உணவு நிவாரணம் இதுவரை விநியோகிக்கப்படவில்லை.

இடம்பெயர்ந்தோர் நிவாரணத்துக்கு வழங்கப்படும் சீனியைத் தனியார் நிறுவனம் ஒன்றே கொள்வனவு செய்து விநியோகிக்கின்றது.

இந்த நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட சீனி, இதுவரை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

அத்துடன் - நிவாரணத்திற்கு விநியோகிக்கபபடும் பருப்பும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

இந்த இரண்டு பொருட்களும் கப்பல்மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்ட பின்னரே - சித்திரை, வைகாசி மாதங்களுக்குரிய நிவாரணம் விநியோகிக்கப்படும் என யாழ்.செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தனிச் சிங்களத்திலேயே கிளிநொச்சிக்கு சுற்றுநிருபம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அரசாங்க செயலகங்களுக்கு கொழும்பிலிருந்து அனுப்பப்படுகின்ற சுற்றுநிருபங்கள், தனிச் சிங்களத்திலேயே இருப்பதாக அரச அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ் - அரசகரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்ற போதும், தமிழ் மூலம் சுற்றறிக்கைகளைப் பல்வேறு அரசதிணைக்களங்கள் அனுப்புவதில்லை. கடந்தவாரம் கிளிநொச்சி மாவட்ட அரச அலுவலகங்களுக்கு, தொழில் திணைக்களத்தில் இருந்து அனுப்பிவைக்கப்பட்ட சுற்றறிக்கை, தனிச் சிங்களத்தில் அமைந்திருந்தால், இதனை வாசித்து அறிந்துகொள்வதற்கு அதிகாரிகள் திண்டாடினர்.

இதற்காகச் சிங்களம் தெரிந்தவர்களைத் தேடி அலைய வேண்டியிருந்தது. தொடர்ந்து சிங்கள மொழிமூலம் சுற்றிக்கைகள் அனுப்பப்படுவது குறித்து, கிளிநொச்சி அரச அதிகாரிகள் கடும்விசனம் வெளியிட்டுள்ளனர்.

# காயமுற்ற வரதரணி உறுப்பினர் கொழும்பு வைத்தியசாலைக்கு!

(யாழ்ப்பாணம்)

கைகள் வெட்டப்பட்டநிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணி உறுப்பினர் - அவசரமாக நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

கடந்த 12 ஆம் திகதி மருதனார்மடம் பகுதியிலுள்ள பற்றை ஒன்றிலிருந்து, கைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் ஈ.பி.ஆர்.எல்.எப் வரதர் அணி உறுப்பினர் நாகமுத்து நாகேந்திரம் என்பவர் மீட்கப்பட்டு, பொலிஸாரால் - யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

துண்டிக்கப்பட்ட இவரது கையைப் பொருத்தும் முயற்சியில் வைத்தியர்கள் தீவிரமாக ஈடுபட்டபோதிலும், அம்முயற்சி பலனளிக்காத நிலையில் கை அகற்றப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் அம்புலன்ஸ் வண்டியில் வந்த படையினர் - கொழும்பு வைத்தியசாலை அனுமதிக்கப் போவதாகக்கூறி அவரைக் கொண்டு சென்றுள்ளனர்.

# இடம் பெயர்ந்தோரின் பிரச்சினை; ஆராய்வதற்கு இடம்பெயர் சேவை!

## மனிதஉரிமை ஆணைக்குழு நடத்துகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் - இடம்பெயர்ந்துவாழும் மக்கள் எதிர்நோக்கும் மனிதஉரிமைகள் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து, அதற்குரிய நடவடிக்கையினை எடுப்பதற்காக மனிதஉரிமை ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோருக்கான செயற்திட்டப்பிரிவு, இடம்பெயர்சேவை ஒன்றை நடத்தி வருகின்றது.

நேற்று முன்தினம் ஆரம்பமான இந்தசேவை, திங்கட்கிழமைவரை நடைபெறும். இந்த இடம்பெயர்சேவையில் புத்தளம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்ட செயற்திட்ட அதிகாரிகளுடன், யாழ்.மாவட்ட செயற்திட்ட அதிகாரி வேழினியும் இணைந்து செயற்படுகின்றார்.

இன்று நெடுந்தீவிலும், திங்கட்கிழமை மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கும் செல்கின்ற இக்குழுவினர் - அங்குள்ள முகாம்களில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் ஆராயவுள்ளதாகத் தெரியவருகின்றது.

(ரா,அ)

# பாடசாலை மாணவர்களுக்கு போதை ரொபிகள் விற்பனை

(கொழும்பு)

கஞ்சாவைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட போதை ரொபிகள்- இரத்தினபுரி மாவட்டத்தில் விற்கப்படுவதாகவும், பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும் இரத்திரபுரி போதைவஸ்துத் தடுப்புப் பொறுப்பதிகாரி எச்சரிக்கை செய்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் போதை ரொபிகள் பாடசாலை மாணவர்களுக்கு விற்கப்பட்டு வருகின்றன. பாடசாலை மாணவர்கள் மத்தியில் விற்கப்படும் இத்தகைய ரொபிகள் விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்குமாறு அவர் மேலும் கேட்டுள்ளார்.

# மேல் மாகான முதலமைச்சரை பதவி நீக்குமாறு வழக்குத்தாக்கல்!

(கொழும்பு)

மேல்மாகாணசபை முதலமைச்சராகப் பதவி வகிப்பதற்கு ரெஜினோல்ட் குரேக்கு - சட்ட அங்கீகாரம் இல்லை என்றும், இவரைப் பதவியிலிருந்து நீக்க உத்தரவிடவேண்டும் எனவும் கோரி, கொழும்பு மேல்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை, மினுவாங்கொட நகரசபையின் முன்னாள் தலைவர் நியூட்டன் குருகுலசூரிய தாக்கல் செய்துள்ளார். இவரை, மாகாணசபைகள் சட்டத்தைப் பயன்படுத்தி, மேல் மாகாணசபை முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே பதவிநீக்கம் செய்திருந்தார்.

இவர், முதலமைச்சராகப் பதவி வகிக்க சட்ட அங்கீகாரம் இல்லாததால், தன்னைப் பதவிநீக்கம் செய்வதற்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும் - தனது பதவி நீக்கத்தை ரத்துச் செய்யவும், ரெஜினோல்ட் குரேயைப் பதவி நீக்கம் செய்யவும் நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் நியூட்டன் குருகுலசூரிய வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

# அவசர காலச்சட்டத்தின் கீழ் கைதானவர் மூன்றரை வருடத்தின் பின்னர் விடுவிப்பு!

(கொழும்பு)

கொழும்பு, ஆமர் வீதியில் தொலைத்தொடர்பு நிலையமொன்றைக் குண்டுவைத்து அழிப்பதற்கு முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில், கடந்த மூன்றரை வருடகாலமாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் - நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு - மண்டூரைச் சேர்ந்த வெங்கடாசலப்பிள்ளை ஆறுமுகநாவலர் பக்கிரிசாமி (வயது 54) என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவார்.

கடந்த 1994 ஆம் ஆண்டு அவசரகாலச்சட்ட விதியின் கீழ் கைதான இவருக்கு எதிராக, வெலிக்கடை நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. நேற்று முன்தினம் வெலிக்கடை விசேட மேல்நீதிமன்றில் மேல் விசாரணை நடைபெற்றபோது, எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அரசதரப்பு சாட்சியாகப் பயன்படுத்த அனுமதிக்க முடியாதென்பதாலும், வேறு சாட்சியங்கள் எதிரிக்கு எதிராக இல்லையென்பதாலும், வழக்கினைத் தொடர்ந்து நடத்த அரசதரப்பு சட்டத்தரணி விரும்பவில்லை என்று வழக்கினை வாபஸ் பெற்றார்.

சந்தேகநபருக்கு எதிரான ஏனைய இரண்டு வழக்குகளும், குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டே தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், அவரை விடுதலை செய்யும்படி வெலிக்கடை விசேட மேல்நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ உத்தரவிட்டார். சந்தேகநபரின் தரப்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா ஆஜராகியிருந்தார்.

(ரா)

# இலங்கை அரசியல் களத்தில் வகுக்கப்படும் புதிய வியூகங்கள்


ரணில்

இலங்கையின் அரசியற் களத்தில் - அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைத் தினசரிப் பத்திரிகைகளை வாசிப்பவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். அரசியற்கள மாற்றத்திற்கு, அயல் நாடொன்றின் முக்கிய பங்களிப்பும் காரணமாக இருக்கலாம் என்ற ஊகங்களும் எழுந்துள்ளன.

மீண்டும் போரைத் தூண்டிவிட்டு, இரத்த ஆற்றில் அரசியல் நடத்த- பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் முயற்சி செய்வதாக உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் அலிக் அலுவிகார குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஜே.வி.பியினரின் இனவிரோத செயற்பாடுகள் - இலங்கையில் ஆரம்பித்து, ஜப்பானின் ரோக்கியோ நகர்வரை சென்றுவிட்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - நாட்டைக் கூறுபோடத் தயாராகி வருவதாகக் கூக்குரலிடும் ஜே.வி.பி, ஜப்பானிலுள்ள இலங்கையர்களைக் கொண்டு கண்டனக் குரலெழுப்ப வைத்திருக்கின்றது.

ஜப்பானின் சவரா நகரிலுள்ள லங்காஜி பௌத்த விகாரைக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழிபடச் சென்றபோது, ஜே.வி.பி ஆதரவாளர்கள் மறியற்போராட்டம் நடத்தி, அவரை அவமதிப்புச் செய்தனர். ஜே.வி.பியினருக்கு இருக்கும், 'நாட்டுப் பற்றை'ச் சிங்கள மக்களுக்கு அரச ஆதரவு ஊடகங்கள் வெளிச்சமிட்டுக் காட்டின. அதனைத் தொடர்ந்து இச் சம்பவத்திற்கும், தனது கட்சிக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என ஜே.வி.பி. மறுப்பறிக்கையை வெளியிட்டது.

ஜப்பானில் - ஜே.வி.பியினர் அவமதித்தது பிரதமரையல்ல, இலங்கை மக்களையே என - மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சரும், தொழிற்பயிற்சி அமைச்சருமான கபீர் ஹாசீம் - நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார். இச் செயலைத் தமது கட்சி செய்யவில்லை என்று கூறிவந்த ஜே.வி.பியினர், இப்போது அச்செயலை நியாயப்படுத்தி நாடாளுமன்றத்தில் உரையாற்றியதோடு மட்டுமல்லாது, தமது ஆதரவாளர்களும் அங்கு இருந்ததாக ஒப்புக்கொண்டுள்ளார். இதன் பின்னணியில் - ஜே.வி.பியின் ஜப்பானிய அமைப்பாளர் சமன்சிறி என்பவர் இருந்துள்ளதாக இப்போது தெரியவந்துள்ளது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜே.வி.பி உறுப்பினர் யார் தெரியுமா? ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் குமார திஸ்ஸநாயக்கவே யாவார். அவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, நாட்டைக் கூறுபோடத் தயாராகிவரும் பிரத்மரிடம் அதைத் தட்டிக்கேட்பதற்கு, ஜப்பானில் வாழும் இலங்கை மக்களுக்கு உரிமை இருக்கின்றது என்று, கூறியதோடு மட்டும் அவர் நின்றுவிடவில்லை. ஜப்பானில் வாழும் இலங்கையர்கள் பிரதமரிடம் - நாம் வீடு திரும்பும்போது, தமக்கு நாடு இருக்குமா? என்று கேட்டதற்கு, உரிமை இருக்கிறது என்றும் கூறியுள்ளார்.

ஜே.வி.பியினர் இலங்கையில் மட்டுமல்ல, ரோக்கியோவிலும் தமது சுயரூபத்தை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளார்கள். இவர்களின் இந்த இனவிரோத நடவடிக்கைகளால், ஜப்பானில் வாழும் இலங்கையர்கள் பலர் வேலை இழக்கவேண்டிய அபாய நிலை தோன்றியுள்ளது.

ஜே.வி.பியினருக்கு - யார் எப்படிப் போனாலும் கவலையில்லை. எப்படியாவது நாட்டின் இயல்புநிலையைப் பாதிக்கச்செய்து, இனவிரோத அரசியலை வளர்த்து, ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றுவதே அவர்களின் குறிக்கோளாகும். இதற்காக - அரசியற்கள நிலையை அவதானித்து, பிரசார வியூகத்தை வகுத்து வருகின்றனர். இதற்கு உதாரணமாக - தென்னிலங்கையில் புலிகள் வழங்கிய மனிதாபிமான நிவாரண உதவிகளை எப்படி அரசியலுக்குப் பயன்படுத்தினார்கள் என்பதைக் கூறமுடியும்.

நாட்டில் இடம்பெறும் கொலைச் சம்பவங்களை அவதானித்த ஜே.வி.பியினர், வெள்ள நிவாரணப் பணிகள் என்ற போர்வையில் - தென்பகுதிக்குப் புலிகள் ஏன் விஜயம் செய்தார்கள் தெரியுமா? அரசியல் உயர்மட்டப் பிரதிநிதிகளைக் கொல்வதற்காகவே வந்தார்கள் என்று பிரசாரம் செய்து வருகின்றனர்.

தனது மக்களுக்கு - அதுவும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மனிதாபிமான உதவிகளைக் கூடச் செய்ய முன்வராத ஜே.வி.பி.- புலிகள் வழங்கிய மனிதாபிமான உதவிகள் பற்றிக் கதைப்பதற்கு, அவர்களுக்குத் தகுதி இருக்கின்றதா என்ற கேள்விகளும் எழத்தான்


ஜி.எல்.பீரிஸ்

செய்கின்றன.

ஜே.வி.பியினரின் சமாதானத்திற்கு எதிரான முயற்சிகள் ஒரு

## போகிற போக்கில்...
### கொழும்பிலிருந்து உதரன்

புறம் நடைபெற, நாம் என்ன ஜே.வி.பியினருக்குக் குறைந்தவர்களா? என்று கேட்குமளவுக்குப் பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார்கள்.

முல்லைத்தீவுக் கடற்பரப்புக்கு அப்பால், சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகள் விடுத்துள்ள எசசரிக்கையைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று, நாடாளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ அரசை அறிவுறுத்தியுள்ளார்.

அவரது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியமபலபிட்டி - ருவான்வெல்லயில் நடத்திய கலந்துரையாடல் ஒன்றில் தெரிவித்த கருத்துக்களை, இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுதல் மிகப் பொருத்தமானதாகும்.

விடுதலைப் புலிகளின் கப்பல்- முல்லைத்தீவுக் கடற்பகுதியில், கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைச் சாட்டாக வைத்து, அரசாங்கம் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கத் தயாராகி வருவதாக அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் - ரோக்கியோ மாநாடு நடைபெறுவதற்கு முன்னர், அரசு சமாதானம் வேண்டும். யுத்தம் வேண்டாம் என்றது. ஆனால், இன்று ரோக்கியோ மாநாட்டுக்குப் பிறகு, யுத்தத்தை ஆரம்பிக்க முயலுகின்றனர். இந்த நாட்டில் - யுத்தத்தை ஆரம்பித்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினரே என்பதையும் சுட்டிக்காட்டினார்.

எமது கட்சியினர் ஆட்சியிலிருந்த போது, தீர்வுத்திட்டத்தைக் கொணடு வந்தனர். அந்தத் தீர்வுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிததபோது, அதனைக் கிழித்து எரித்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினரே. தமிழருக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்கும் தீர்வுத்திட்டம் என்று கூக்குரலிட்டவர்களும் இந்த ஐக்கிய தேசியக் கட்சியினரே.

ஜனாதிபதிக்கு - நெற்றியில் பொட்டு வைத்த படங்களை நாடு முழுவதும் ஒட்டி, இனவாதம் பேசியவர்களும் இந்த ஆட்சியாளர்களே என்று கூறியதோடு - சமாதானம், சமாதானம் என்று மக்களை ஏமாற்றி வருகின்றார்கள் என்று, ரஞ்சித் சியம்பலபிட்டி கூறியுள்ளார். பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்நத இருவர் - இரண்டு விதமாகக் கருத்துத் தெரிவிக்கின்றார்களே, எப்படி என்று எண்ணத் தோன்றுகின்றதா? சற்றுப் பொறுங்கள். ஐக்கியதேசிய முன்னணியைச் சேர்ந்தவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

ஆளும்கட்சிப் பேச்சாளரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் "புலிகள் மீண்டும் யுத்தத்தில் ஈடுபடமாட்டார்கள்" என உறுதிபடக்கூறுகின்றார்.

அவரது கட்சியைச் சேர்ந்தவரும், அமெரிக்காவின் மிக நெருங்கிய நண்பருமான, மிலிந்த மொறகொட- தனியார் தொலைக்காட்சி ஒன்றில் உரையாற்றியபோது, "நாட்டில் மீண்டுமொரு யுத்தம் ஏற்பட்டால் - இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் இராணுவரீதியில் உதவும் என்று கூறியுள்ளார். உண்மையைக் கூறிவிட்டார் என்கிறீர்களா? சிங்கள இனவாதக் கட்சியான சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண, வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் அல்ல. இருந்திராத ஒன்றைத் தமிழர் தாயகம் என்று எப்படிக் கூறுவது? உதவிவழங்கும் நாடுகள் கூட்டத்தில், வட-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறி, தமிழர்களுக்குச் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்து விட்டார் எனப் பிரசாரம் செய்து வருகின்றார்.

இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் - கடந்த 18 ஆம் திகதி செய்தியாளர் மாநாட்டைக் கூட்டியிருந்தார். பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில், பேராசிரியர் ஜகத் விக்கிரமசிங்க கருத்துக்களை வெளியிட்டார். ரோக்கியோ மாநாட்டில் பெற்ற கடன் உதவிகளுக்கு, வருடாந்தம் வட்டியை அரசு செலுத்தவேண்டும். வட-கிழக்கில் அரசாங்கத்துக்கு வரி செலுத்தவிடாமல், மக்களைப் புலிகள் தடுத்துவருகின்றார்கள். ரோக்கியோ மாநாட்டில் பெறப்பட்ட கடனுதவிகளுக்கான முழு வட்டியையும் சிங்கள மக்களா செலுத்துவது? தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டும் புலிகள்- அரசுக்கு வரியைச் செலுத்தவிடாமல், தமிழ் மக்களைத் தடுப்பதன் மூலம் சிங்களமக்களுக்கு அநீதியை ஏற்படுத்தவில்லையா? என்று பேராசிரியர் ஜகத் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையின் அரசியல் கள நிலை எப்படியிருக்கிறது என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தினமும் ஜே.வி.பி, பொதுஜன ஐக்கிய முன்னணி, சிஹல உறுமய ஆகிய கட்சிகள்- இனவாதப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன என்ற உண்மையையும் தெரிந்து கொள்ளவேண்டும்.

தற்போதைய நிலையில், ஆட்சியிலுள்ள அரசால் - புலிகள் கேட்கும் இடைக்கால நிர்வாகத்தை வழங்கக் கூடிய சக்தி இருப்பதாகத் தெரியவில்லை.

புலிகள் யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டதால், அரசு பெருந்தொகையான நிதியை - உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து பெற்றுவிட்டது. புலிகள் - யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ளவில்லையாயின், இலங்கைக்குப் பெருமளவு நிதி கிடைத்திருக்க வாய்ப்பில்லை. யுத்தநிறுத்தத்தால் இராணுவக்கெடுபிடிகள் குறைந்தனவே தவிர, தமிழ் மக்களின் வாழ்க்கையில் எந்தவித முன்



னேற்றமும் ஏற்படவில்லை. அவர்கள் தொடர்ந்து இன்னல்களை அனுபவித்தே வருகின்றார்கள். தமிழ் மக்களின் துயர் துடைக்கப்பட வேண்டுமானால், இடைக்கால நிர்வாகம் மிகவும் அவசியமாகும்.

அரசியற் சூழ்நிலைகளை நன்கு அவதானித்தால், புலிகளைச் சீண்டி- யுத்தத்திற்கு அழைப்பதற்கான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகின்றது. மேற்குலக நாடுகளின் தலையீடுகளும் அதிகரித்து வருகின்றன.

மேற்குலக சமாதானத் தூதுவர்கள் ஊடாக, ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்குப் புலிகளை அழைத்து, சர்வதேச சமூகத்தின் மத்தியில் உறுதிமொழிகளைப் பெற்றுக்கொள்ள அரசு வகுத்த வியூகத்தைப் புலிகள் முறியடித்து விட்டார்கள். இதனால், அரசு புதிய வியூகங்களை வகுத்து வருவதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றார்கள்.


மகிந்த ராஜபக்ஷ

அமெரிக்காவினூடாகப் புலிகளைப் பணிய வைக்க - அரசு முயற்சி செய்வதாகவும் கூறப்படுகின்றது. புலிகளைச் சீண்டி - அவர்களை யுத்தத்தை ஆரம்பிக்க வைத்து, சமாதானத்தைக் குழப்பியவர்கள் விடுதலைப் புலிகளே என்று கூறி, சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்று, புலிகளை ஓரங்கட்டிவிட முயற்சிகள் நடைபெறுவதாகவும் சில தகவல்கள் கூறுகின்றன.

20 வருடகாலமாக நடைபெற்று வந்த யுத்தத்தை - முடிவுக்குக் கொணடு வந்ததற்காக, பிரதமர் ரணிலுக்கு "ஆசியாவின் கதாநாயகன்" என்ற விருதை "ரைம்" சஞ்சிகை வழங்கிக் கௌரவித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசை, சமாதானத்தை விரும்பும் அரசாகவே சர்வதேச சமூகம் நோக்குகின்றது. சிங்கள இனவாதக் கட்சிகள், மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க வைக்க பலவழிகளில் முயன்று வருகின்றன.

இலங்கையில், அமைதியை விரும்பாத அயல்நாடும், அதற்கு ஊக்கம் கொடுத்துவருவதாகக் கூறப்படுகின்றது. இலங்கையின் தலைநகரில் - மீண்டும் இராணுவத்தினரை ஆங்காங்கே காணமுடிகின்றது. வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதனையிடப்படுகின்றன.

20 வருடகால யுத்தத்தின் கொடூரத்தைப் பற்றிப் பெரும்பான்மையின அரசியற்கட்சிகள் சிந்தித்ததாகத் தெரியவில்லை. இடைக்கால நிர்வாகத்தை வழங்கவே தயாரில்லாத சமூகத் திடமிருந்து, தமிழர்களுக்கு நிலையான தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்க முடியுமா?

சர்வதேச சமூகத்துடன் இணைந்து, அரசு மீண்டும் புலிகளுக்கு நெருக்கடிகளைக் கொடுப்பதற்கான வியூகங்களை வகுத்து வருவதாக அரசயல் அவதானிகள் கூறுகின்றனர்.

பிரதமர் "ஆசியாவின் கதாநாயகன்" விருதைப் பெற்றுவிட்டார். அந்த விருதை அவர் பெற்றுக்கொள்ளக் காரணமாக இருந்தவர்கள் யார் என்பதை அவர் நினைவில் கொள்வாரா? கொண்டவராக இருந்தால் மட்டுமே அவரால் நியாயமாகச் செயற்படமுடியும்.

# படையினரின் ரோந்து, புதிய காவலரணங்கள் மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்துகின்றது!

## மன்னார் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மகஜர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதும், புதிய காவல் நிலையங்களை அமைப்பதும் மக்கள் மத்தியில் அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது என மன்னார் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அச்சமான சூழ்நிலை தொடர்பாக, யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு மன்னார் மாவட்ட வெகுஜன ஒன்றியம், அனுப்பிவைத்துள்ள மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த சில தினங்களாக, மன்னார் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் - படையினர் புதிய காவலரணங்களை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களில் படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், படையினர் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கை மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுமா என்ற அச்சநிலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே, படையினரின் இந்தச் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி, கடற்தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

இவர்கள், எமது கரையை அண்மித்த பகுதியில்கூட கடற்தொழிலில் ஈடுபடுகின்றனர். இதனைக் கடற்படையினர் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்களைக் கைது செய்து உரிய நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றனர். சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு இத்தகைய சம்பவங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்றும்,

கிழக்குக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல், இலங்கைக் கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்டமை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல் எனவும், அதனை தாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக - நீதியான விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் எனவும் இந்த மகஜரில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (201)

# செய்திப் படங்கள்



தனது வாயின் மேல் அண்ணத்தில் பல்லொன்று முளைத்தமையால் - தீய ஆவியால் பீடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டு, நாயொன்றுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்ட இந்தியச் சிறுமி ஹர்ணாமோனி ஹண்டசா இவள்தான். ஒன்பதே வயதான இந்தச் சிறுமி கொல்கத்தாவிற்கு அருகே உள்ள பழங்குடி இனத்தைச் சேர்ந்தவள். இந்தக் கொடுமைக்குப் பின்பு - மறுபடியும் வயது வந்த பின் திருமணம் செய்ய இவளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.



பிரான்சில் - ஈரானியர்கள் கைதானதைக் கண்டித்து, சுவிற்சர்லாந்தின் பேர்ன் நகரில் நேற்றுமுன்தினம் தன்னைத்தானே எரித்துக்கொண்ட ஈரானியர். படுகாயத்துடன் இப்போது வைத்தியசாலையில் இருக்கிறார் இவர்.



லைபீரியாவிலிருந்து போரின் அகோரத்தால் தப்பியோடும் கானா நாட்டவர்கள் இவர்கள். தலைநகர் மொன்ரோவியாவில் - கப்பல் ஒன்றில் ஏறுவதற்காக துறைமுக இரும்புச் சுவரை ஏறிக்கடக்கின்றனர்.



வொஷிங்ரன் விமானத்தளம் ஒன்றில் நடந்து செல்லும்போது - கால் உளுக்கியதால், நடை தடைப்படுகின்றார் அமெரிக்க ஜனாதிபதி புஷ்.

# சட்டவிரோத குடியேற்றக்காரர் விவகாரம்;

# பிரிட்டனுக்கு ஐரோப்பிய யூனியன் எதிர்ப்பு!



குடியேற்றக் கொள்கைக்கு எதிர்ப்பு

பிரிட்டனுக்குள்ளும், ஐரோப்பிய யூனியனின் ஏனைய நாடுகளுக்குள்ளும் நுழையும் சட்டவிரோத குடியேற்றக்காரர்களை - இந்நாடுகளுக்கு வெளியே, தனியொரு தீவில் தடுத்து வைப்பதான பிரிட்டனின் கோரிக்கைக்கு, ஐரோப்பிய யூனியனின் ஏனைய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

கிரிஸீல் நடந்துவரும், ஐரோப்பிய யூனியனின் தலைவர்கள் மாநாட்டில், இந்த எதிர்ப்பு வெளியானது.

இவ்விதம் செய்வது - அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும் என, தலைவர்கள் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

இதேவேளை - ஐரோப்பிய யூனியனுக்கான தனியான அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குவது பற்றித் தீவிரமாகக் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் ஒக்ரோபர் மாதமளவில் - இத்தாலியில் மீண்டும் - ஐரோப்பிய யூனியனின் உயர்மட்ட மாநாடு நடப்பதற்கு முன்னர் - இது தொடர்பாக உறுதியான முடிவு மேற்கொள்ளப்பட்டுவிடும் எனவும், கிரிஸீலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பதினைந்து நாடுகளின் தலைவர்கள் கலந்துரையாடிவரும் இந்த மாநாட்டில், அடுத்த மே மாதத்துக்குள் மேலும் 10 நாடுகளை ஐரோப்பிய யூனியனில் சேர்த்துக் கொள்வது தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் ஒன்றும் மேற்கொள்ளப்படவுள்ளது.



ஐரோப்பிய யூனியன் மாநாட்டுக்கு கிரீஸில் கடும் பாதுகாப்பு.

எனினும் - ஐரோப்பிய யூனியனுக்குள்ளும் பூசல்கள் இல்லாமலில்லை. ஐரோப்பிய யூனியனுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும், உலகில் தனித்துவமான சக்தியாக அது உருவாகவேண்டும் என, ஜேர்மனியும் ஏனைய சில நாடுகளும் வலியுறுத்த,

பிரிட்டன் மற்றும் டென்மார்க் போன்ற 'நேட்டோ' அமைப்பை விட ஐரோப்பிய யூனியன் அதிக அதிகாரங்களைக் கொண்டிருக்கக் கூடாது என்றும், குறிப்பாக - பாதுகாப்பு விவகாரத்தில் 'நேட்டோ', ஐரோப்பிய யூனியனைவிடப் பலமுள்ளதாக இருக்கவேண்டும் என்றும் கருதுவதால் - முரண்பாடுகள் தலைதூக்கியேயுள்ளன.

இது இவ்வாறிருக்க - ஐரோப்பிய யூனியனில் இணையவிருக்கும் பல்கன் நாடுகளின் தலைவர்களை தற்போதுள்ள ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் இன்று சந்தித்துப் பேசுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் படகுகள் மோதின; 23 பயணிகள் பலியாகினர்!

## சீரற்ற காலநிலையால் சம்பவம்



சீனாவின் யாங்சே நதியில் - இரண்டு படகுகள் பனிப்புகாருக்கு நடுவே நேருக்குநேர் மோதிக்கொண்டதில் 23 பேருக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

பயணிகள் படகொன்றும், சரக்குகளை ஏற்றிவந்த படகொன்றும் நேற்று முன்தினம் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன.

பயணிகள் படகில் மாணவர்களும், விவசாயிகளுமாக 35 பேர் பயணித்துக் கொண்டிருந்ததாகவும் - இவர்களில் 23 பேர் பலியானதாக, அல்லது காணாமற்போனதாக உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்பிரதேசத்தில் கடுமையான பனிப்புகார் இருந்தபோதும், துறைமுக அதிகாரிகளின் எச்சரிக்கைகளையும் மீறி இந்தப் படகுகள் நதியில் சென்றதாலேயே இந்த விபத்து நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சிம்பாப்வே எதிர்க்கட்சித் தலைவர் பிணையில் விடுதலை!



சிறையிலிருக்கும் - சிம்பாப்வேயின் எதிர்க்கட்சித் தலைவர் மோர்கன் ஸ்வான்கிராயை, அந்நாட்டு நீதிமன்றம் பிணையில் விடுவித்தது.

சிம்பாப்வே ஜனாதிபதி ரொபேர்ட் முகாபேக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்தார் என்ற குற்றச்சாட்டில்- 15 நாள்களுக்கு முன்னர் இவர் கைதாகியிருந்தார்.

கடந்த வருடம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் முகாபேக்கு எதிராகப் போட்டியிட்டுத் தோற்ற ஸ்வான்கிராய், அந்தத் தேர்தல் முறைகேடானது எனக் குற்றஞ்சுமத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## சமாதானத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக

# அமெரிக்க அமைச்சர் பவல் ஜெருசலேத்துக்கு விஜயம்!

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் புதிய சமாதானத் திட்டத்தை முன்னெடுக்கும் வகையில்- அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின் பவல், நேற்று ஜெருசலேம் வந்து சேர்ந்தார்.

அவர் - இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன், பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூட் அப்பாஸ் ஆகியோருடன் தனித்தனியாகப் பேசுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய சமாதானத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்பு - இருதரப்பிலும் நடந்த மோதல்களில், 60 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இச்சமாதானத்திட்டம் நகரமுடியாத நிலையில் சிக்குண்டுள்ளது.



யூதமக்கள் - படையினர் மோதல்

கொலின் பவல் ஜெருசலேத்தை வந்தடைவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பும் - மேற்குக் கரையில் இஸ்ரேலியர் குடியிருப்புக்களை அகற்ற முயன்ற அந்நாட்டுப் படையினருக்கும், யூதக்குடியேற்றக்காரருக்கும் இடையே, கடும் மோதல் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

உலகவலம்

# சஹாரா பாலைவனத்தில் உயிர்துறந்த நூற்றுக்கணக்கான கானா நாட்டவர்!

உலகின் மிகப்பெரிய பாலைவனமான 'சஹாரா' பாலைவனத்தைக் கடக்க முயன்ற 200 கானா நாட்டவர்கள் - கடும் வறட்சியாலும், வெப்பத்தாலும், உடல் கருகிப் பலியாகினர்.

கடந்த ஜனவரி மாதம் முதல் இம்மாதம் வரையில் இந்த மரணங்கள் நிகழ்ந்ததாக - லிபியாவுக்கான கானா நாட்டின் தூதர் ஜோர்ஜ் ருமி தெரிவித்தார்.

லிபியாவிலுள்ள 'சஹாரா' பாலை வனத்தை அண்டி வாழ்ந்துவந்த இந்த மக்கள் - தமது பகுதிகளில் ஏற்பட்டுவரும் வரட்சியால் பசும் புற்தரைகளைத் தேடி - பாலைவனத்தைக் கடக்க முற்படுவது இன்று நாளாந்த சம்பவமாகிவிட்டது. இவ்வாறான முயற்சியிலேயே இத்தகைய பரிதாப மரணங்கள் ஏற்பட்டுள்ளன.

லிபியத் தலைநகர் திரிப்போலியிலிருந்து இப்படியாக மாட்டிக்கொள்பவர்களை மீட்க முயற்சிகள் நடந்தபோதும் - அவை பெரிய பலனைத் தரவில்லை எனக் கூறப்படுகிறது.

ஏறத்தாழ 300 கீலோமீற்றர்கள் வரை பாலைவனத்துக்குள் உட்புகுந்தவர்கள், குடிக்க நீரின்றியும், கடும் வெப்பத்தாலும் மரணமடைவது - பெரும் மனித அவலமென மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர்.

கானாவிலிருந்து லிபியாவுக்குச் சென்றால் - பின்னர் அங்கிருந்து மத்தியதரைக்கடல் வழியாக ஐரோப்பாவுக்குள் நுழைய முடியும் என்ற எண்ணத்தாலேயே பெருமளவு கானா நாட்டவர்கள் இந்த உயிர்வதைப் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மீள்குடியமர்வுக் கொடுப்பனவு தற்காலிகமாக இடைநிறுத்தம்!

## மாவட்ட புனர்வாழ்வுக் குழுவிடம் நிதியில்லையாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கு, அண்மைக் காலத்தில் ஏ-9 பாதையூடாக வந்து மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கான, மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படுவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கிறது.

இதற்கான நிதி - அரசாங்கத்திடமிருந்து, மாவட்டப் புனர்வாழ்வு குழுவுக்கு கிடைக்கவில்லை என்பதனாலேயே - இக்கொடுப்பனவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்.மாவட்டத்தில், இதுவரை மீள்குடியேறியுள்ள 45 ஆயிரம் குடும்பங்களில், இதுவரை - நான்காயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே மீள்குடியமர்வு உதவிக்கொடுப்பனவாக, 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் - யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியவர்களுக்கான் கொடுப்பன்வுகள் வழங்கும்போது, அதற்கான பயனாளிகளைத் தெரிவுசெய்யும் நடைமுறையிலும், சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி - ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலுமுள்ள கிராமங்களிலும், கிராமியப் புனர்வாழ்வுக் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இக்குழுவினால் - பயனாளிகள் தெரிவு, 'அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பிரதேச செயலாளரின் தலைமையில் இடம்பெறும். ஒவ்வொரு கிராமத்திலும் மீளக்குடியமர்ந்தோர் நிதியினைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிப்போர், உண்மையிலேயே அதற்குத் தகுதியானவரா என்று, மேற்படி குழுவே நேரடியாகச் சென்று ஆராயும்.

அதன்பின்பே, பிரதேச செயலகங்களுக்கு, அவர்களது விண்ணப்பங்கள அனுப்பிவைக்கப்பட்டு, மீள்குடியமர்வு நிதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த நடைமுறை, இந்தமாத இறுதியிலிருந்து அமுலுக்கு வரவுள்ளது. (ரா,அ)

# உள்ளூராட்சித் தேர்தல் ஜனவரிக்கு ஒத்திவைப்பு

வடக்கு-கிழக்கு மாவட்டங்களில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய - யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய நிர்வாக மாவட்டங்களில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி நடத்தப்படும் என்று, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை, இந்தமாதம் 25 ஆம் திகதி நடத்துவதாக முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் தெரிவு அத்தாட்சி அதிகாரிகளுடன், தேர்தல் ஆணையாளர் நடத்திய ஆலோசனையின் பின்னர், புதிய திகதி தீர்மானிக்கப் பட்டது.

# 17 ஆயிரம் நோயாளருக்கு ஒரே மாதத்தில் சிகிச்சை!

## தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை சாதனை

(ஆழியவளை)

தமிழீழ சுகாதார சேவையினரால் நடத்தப்பட்டுவரும் - தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால், கடந்த மே மாதத்தில் மாத்திரம் 16,923 நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளதாக மருத்துசேவை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி மருத்துவ நிலையங்கள்- ஆழியவளை, மாங்குளம், நைனாமடு, கற்சிலைமடு, அலம்பில், பூநகரி, கறுக்காய்தீவு, நெடுந்தீவு, புளியங்குளம், ஐயன்கன்குளம் ஆகிய 10 இடங்களில் சேவை செய்துவருகின்றன.

மேலும், திலீபன் மருத்துவ சேவையினரால், மருத்துவ நிலையங்களை அண்டியுள்ள மக்களுக்காக- சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகளாக - சுகாதாரக் கல்வியூட்டல் மற்றும் கிராம தரிசிப்புக்களை மேற்கொள்ளல் எனப் பல்வேறு சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், 2698 நோயாளர்களுக்கு நடமாடும் மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (122)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

முதுபெரும் பத்திரிகையாளர் எஸ்.எம்.ஜியின் ஆசிரியர் தலையங்கங்கள் சில அடங்கிய "அந்த ஒரு உயிர்தானா உயிர்" என்ற நூல் வெளியீட்டு விழா, இன்று காலை 10.00 மணிக்கு மட்டக்களப்பு பொது நூல் நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

'தமிழச்சு' ஆதரவில் மட்டக்களப்பு - கலை, இலக்கியப் பேரவை நடாத்தும் இந்த நூல் வெளியீட்டு விழா - மாநகரசபை ஆணையாளர் ச.நவநீதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் - கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

அரசியல், இராணுவ ஆய்வாளர் டி.சிவராம் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

★ ★ ★

தொழில் நீதிமன்ற நீதிபதியான மனோ ஸ்ரீதரன் எழுதிய - இரண்டு நூல்களின் வெளியீட்டுவிழா நாளை நடைபெறவுள்ளது.

'இலங்கையின் தொழில் நியாய சபைகளின் செயற்பாடு', "குரும்பசிட்டியும் சட்டப் பாரம்பரியமும்" ஆகிய இரு நூல்களுமே நாளை வெளியிட்டு வைக்கப்படவுள்ளன.

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இடம்பெறும் இவ்வெளியீட்டு விழாவில், யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (லி)

# பொங்கு தமிழ்...

யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம், யாழ்.மாவட்ட கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம், வலி.வடக்கு பொது அமைப்புகளின் ஒன்றியம், யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் ஆகிய பொது அமைப்புகள் உட்பட, மேலும் பல பொது அமைப்புகளும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்விற்கு ஆதரவு தெரிவித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

அத்துடன்- யாழ்.குடாநாட்டில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு தொடர்பான- கலந்துரையாடல்களும், கலை நிகழ்ச்சிகளும் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

அதேவேளை- யாழ்.நகரில் நேற்று பெரியளவில் வடிவமைக்கப்பட்ட பானை ஒன்றினை வாகனத்தில் பொருத்தி, அதனை சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரித்து எழுச்சிப் பாடல்கள் ஒலிக்க, வீதிகள் தோறும் எடுத்துச் செல்லப்பட்டது.

# அமெரிக்க ஏவுகணை...

யரைச் சந்திக்கவும், இலங்கையின் கலாசாரத்தை அனுபவிக்கவும், கொழும்பின் முக்கிய இடங்களைப் பார்வையிடவும் - இது நல்லதொரு வாய்ப்பு என, அமெரிக்கத் தூதரகம் மேலும் கூறியுள்ளது.

அமெரிக்காவின் ஹவாய் தீவிலுள்ள, பேர்ள் துறைமுகத்திலிருந்து இயங்கும் இந்தக் கப்பல் - கடற் சண்டைகளில் தீவிரமாக ஈடுபடக் கூடியதாக ஏவுகணைகள் வசதிகளைக் கொண்டது.

'ஓ கேன்' இங்கு தங்கியிருக்கும் பொழுதில் - கப்பலின் பிரதம அதிகாரி கொமாண்டர் மைக்கல் எஸ். விலான்ட், இலங்கைக் கடற்படைத் தளபதியுடனும், உயரதிகாரிகளுடனும் பேச்சு நடத்தவுள்ளார்.

இதேவேளை - இலங்கைக் கடற்படையினர், இந்தக் கப்பலில் உள்ள நவீன உபகரணங்கள் பற்றி அறியவும் வாய்ப்புக் கிடைத்துள்ளதாக - கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கப்பலின் தங்கு தளமான ஹவாய் தீவிலுள்ள, அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய கடற்படைத் தளத்திற்கு - கடந்த சில நாட்களுக்கு முன்னர், கடற்படைத் தளபதி தயா சந்தகிரியும், அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் தேவிந்த சுபசிங்கவும் நேரில் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறு இருக்க - அமெரிக்கக் கப்பல் வந்ததைத் தொடர்ந்து கொழும்புத் துறைமுகத்தின் உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்பு ஏற்பாடுகள் நேற்றுமுதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாலன் நாமகள்

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், சரசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாலன் நாமகள் நேற்று (20.06.2003) காலமானார்.

அன்னார் ந.சிவபாலனின் அன்பு மனைவியும், சாம்பவி, சங்கவி ஆகியோரின் தாயாரும், அருணாசலம் (ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்), சிவசாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், திருமதிகள் கௌரி சண்முகலிங்கம் (லண்டன்), யமுனா சிவகுமாரன் (ஜேர்மனி), கங்கா நந்தகுமாரன் (நோர்வே), குகன் (ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), விசயன் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற ச.நமசிவாயம், திருமதி ந.புனிதவதி ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.06.2003 (சனிக்கிழமை) பி.ப.3.00 மணிக்கு சரசாலையில் நடைபெற்று, தகனக் கிரியைக்காகப் பூதவுடல் ஆலடி (சரசாலை) மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
**ந.சிவபாலன்** (கணவன்),
**அம்பிகா மருந்தகம், சாவகச்சேரி.**

*சரசாலை வடக்கு,*
*சரசாலை.* (388)

# கூட்டணி...

தனுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பாக - கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தனைத் தொடர்பு கொண்டபோது -

மிக விரைவில் கூட்டணியின் செயற்குழு கூட்டப்பட்டு - அதில் உறுப்பினர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்ட பின்னரே, பொதுச்சபை கூடுவதான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றார்.

உறுப்பினர்களின் கோரிக்கையின்படி, பல விடயங்களையும் உள்ளடக்குவதாகவே பொதுச்சபையைக் கூட்டுவதற்கான வேண்டுகோள் கிடைத்திருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - கூட்டணியின் தலைவர் பதவியிலிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரிக்கு, கட்சிக்குள் ஏற்பட்டுள்ள எதிர்ப்பின் விளைவாகவே - புதிய பொதுச்சபையைக் கூட்டக் கோரிக்கை விடுக்கப்படுவதாக, கூட்டணி வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

# நீர் அள்ளச் சென்ற ஆசிரியை கிணற்றில் வீழ்ந்து மரணம்!

## அச்சுவேலியில் சம்பவம்

கிணற்றில் நீர் எடுக்கச் சென்ற ஆசிரியை, தவறுதலாகக் கிணற்றில் வீழ்ந்து பலியான சம்பவம், அச்சுவேலி தெற்கு - அண்ணா வீதியில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம், அதிகாலை கிணற்றில் நீரள்ளச் சென்ற இராசையா கமலமணி (வயது 40) என்ற ஆசிரியையே தவறுதலாகக் கிணற்றில் வீழ்ந்து மரணமானவராவார்.

இவரது சடலம், அச்சுவேலி பொலிஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டது. சம்பவம் நடந்த இடத்திற்கு வந்த, மல்லாகம் மாவட்ட நீதிவான் சரோஜினி இளங்கோவன் மரண விசாரணையின் பின்னர், சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். (128)

# கொடிகாமம் நகருக்கருகே புதிய சோதனைச் சாவடி!

## நேற்றுமுன்தினம் முதல் கெடுபிடி ஆரம்பம்

கொடிகாமம் நகருக்கு அண்மையில் புதிய சோதனைச் சாவடி ஒன்று அமைக்கப்பட்டு - பொலிஸாரும், இராணுவத்தினரும் சோதனைகளை நடாத்திவருகின்றனர்.

கொடிகாமம் - யாழ். வீதியில், இதற்கெனப் புதிதாக முட்கம்பித் தடைகள் போடப்பட்டு, இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நேற்றுமுன்தினம் அதிகாலை - கொடிகாமம் நகரில்; இராணுவத்தினர் குவிக்கப்பட்டு - இந்தச் சோதனைத் தடைமுகாம் அமைக்கும் பணி நடைபெற்றது.

இதில் - கொடிகாமத்திலிருந்து யாழ்.நகர் நோக்கிச் செல்லும் வாகனங்களும் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

இங்கு - பொதுமக்களுடைய அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்படுவதுடன், உடற்சோதனையும் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

# வாகன ஆவணம் தொலைந்தால் ஒரு வாரம்வரை தேடிப்பாருங்கள்!

## மக்களுக்குப் பொலிஸார் அறிவுரை

மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப் பத்திரம் ஆகிய ஆவணங்களைத் தொலைத்தவர்களுக்கு - உடனடியாக முறையீட்டுப் பிரதியினை வழங்கமுடியாதென, யாழ். பொலிஸ் நிலையத்தின் சிறுகுற்றப் பிரிவுப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மோட்டார் வாகனங்களின் ஆவணங்களைத் தொலைத்தவர்கள்- குறைந்தது ஒரு கிழமையாவது நன்கு தேடிப்பார்த்த பின்பே தமக்கு முறையிடவேண்டும் என்றும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு ஆவணங்களைத் தொலைத்தவர்கள் - போக்குவரத்துப் பொலிஸாரின் வீதிச் சோதனையின் போது சமர்ப்பிப்பதற்காக, தற்போது அடிக்கடி பொலிஸ் நிலையங்களுக்கு வந்து முறைப்பாடுகளைச் செய்து வருவதாகவும் - பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் இந்த அறிவிப்பு மூலம் - தாம் ஆவணங்களைத் தொலைத்த காலத்திற்கும் முறைப்பாடு செய்யும் காலத்திற்குமிடையே, போக்குவரத்துப் பொலிஸாரின் சோதனைகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது என மக்கள் குழப்பமடைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# இடைக்கால...

சிடம் நாம் மிக விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறோம்.

புலிகளின் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில், உறுதியான அதிகாரங்களைக் கொண்ட நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை அரசு உருவாக்கினால் மட்டுமே, சமாதான முயற்சிகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்த முடியும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

வட-கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியமானது என்றும், அவர் கூறினார்.

இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி செய்து வருவதாகத் தாம் அறிந்து கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (200)

## கிளிநொச்சிக்கு விரைவில் மின்சாரம்

கிளிநொச்சி மாவட்டத்துக்கு விரைவில் மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்துக்கு முன்பாகவும், அதனை அண்டியுள்ள பகுதிகளில் மின்சாரக் கம்பங்கள் நாட்டப்படும் பணிகள் கடந்த சில நாள்களாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

பாரிய இயந்திரங்களின் துணையுடன் மேற்படி வேலைகள் நடைபெற்றுவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. (122)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.